E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

மின்னிதழ்

2023 ஜூலை 15 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 91 இல. 166 | Saturday 15, July, 2023 | 11 பக்கங்கள்

## மத வெறுப்பை நிராகரிக்கும் தீர்மானம் நிறைவேற்றம்

### ஜெனீவா பேரவையில் நேற்று நிறைவேறியது

புனித குர்ஆனை இழிவுபடுத்தும் சமீபகால மற்றும் திட்டமிட்ட செயல்கள் உட்பட மத வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் எந்தவொரு வெளிப்பாட்டையும் வன்மையாக நிராகரிக்கும் தீர்மானம், ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறையை தூண்டும் மத வெறுப்பை எதிர்ப்பது' என்ற இந்தத் தீர்மானத்துக்கு 28 பேர்

06

## அனைத்து துறைகளிலும் உரிய நியமங்கள் பின்பற்ற வேண்டும்

### அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்து



அரசாங்கத்திலுள்ள அனைத்து துறைகளிலும் உரிய நியமங்கள் பின்பற்றப்பட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். யாழ். நெடுந்தீவு பிரதேசத்துக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின்

06

## பொருளாதார வளர்ச்சியை அடைய நாட்டை உலகுக்கு திறந்துவிடல் அவசியம்

### இந்திய வர்த்தகர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இலங்கையை உலகுக்கு திறந்துவிட எதிர்பார்த்துள்ளதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்கான சட்ட சீர்திருத்தங்கள் விரைவில் கொண்டு வரப்படுமெனவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

06



## பிராந்தியத்தில் சிறந்த உயர் கல்வி மையமாக இலங்கை மாற்றப்படும்

### உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன்

எதிர்வரும் 2030ஆம் ஆண்டில் சர்வதேச தரத்திலான மாணவர்களை உருவாக்கும் வகையிலும், புத்தாக்க அடிப்படையிலும், எதிர்கால பிரச்சினைகளை அடையாளம் கண்டு தூர நோக்குடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் மாணவர்களை உருவாக்கும் வகையிலும், இலங்கையின் பல்கலைக்கழக கல்வி முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படுமென, உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

06



# மக்களுக்கு மருந்துகளை தாமதமின்றி வழங்குவதை உறுதிசெய்ய வேண்டும்

## சுகாதார அமைச்சுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்பு



### அனைத்து மருந்து வகைகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை அவசியமென்றும் அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி வலியுறுத்து

மக்களுக்கு மருந்துகளை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதை சுகாதார அமைச்சு உறுதிசெய்ய வேண்டுமெனவும், நாட்டில் உள்ளஅனைத்து மருந்து வகைகள் தொடர்பிலும் வெளிப்படைத்தன்மை அவசியம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

சுகாதார அமைச்சினால் நிர்வகிக்கப்படும் விசேட இணையத்தளம் மூலம் ஒவ்வொரு வைத்தியசாலையிலும் உள்ள மருந்துகளின் அளவு மற்றும் நாளாந்தம் பெற்றுக்கொள்ளும் மொத்த மருந்துத்தொகை குறித்த தரவுகளை வழங்க வேண்டும் என தெரிவித்த ஜனாதிபதி, இந்த வலையமைப்பு செயற்பாட்டின் ஊடாக வைத்தியசாலைகளுக்கு இடையில் மருந்துகளை

06

யாழ்ப்பாணத்தில் இன்றும் நாளையும்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தொழில் அமைச்சின் விசேட நடமாடும் சேவை

### யாழ். முற்றவெளி அரங்கில் விசேட கண்காட்சியும் இடம்பெறும்

**யாழ். குறூப், யாழ். விசேட நிருபர்கள்**

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் Glocal Fair கண்காட்சி இன்றும் (15) நாளையும் (16) யாழ்ப்பாணம், முற்றவெளி அரங்கில் நடைபெறுகிறது.

தொழில் அமைச்சின் கீழான சகல திணைக்களங்கள், ஊழியர்

06




## வெளிநாட்டு வேலைகளுக்கு சட்ட ரீதியாக செல்லுங்கள்

### மோசடிக்காரர்களை நம்ப வேண்டாம் – மனுஷ நாணயக்கார



**யாழ். விசேட நிருபர்**

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு சட்ட ரீதியாக செல்லுங்களென்பதுடன், ஏமாற்று மற்றும் மோசடிக்காரர்களை நம்பி பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டாமென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

06

## சிறுபான்மையினர் பிரச்சினை சம்பந்தன்- ஜூலி கலந்துரையாடல்

### விரிவாக பேசப்பட்டதாக டுவிட்டரில் ஜூலி பதிவு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்குமிடையில் சந்திப்பொன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கையில் தமிழர் மற்றும் பிற சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்கான சமூகத்தின்

06

## கலாசூரி சிவகுருநாதன் நினைவு நூல் வெளியீடு

### நாளை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்



தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதனின் 20ஆவது ஆண்டு நினைவாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை 16ஆம் திகதி

06

## திரிபோஷா உற்பத்தி விநியோகம் வழமைக்கு!

### மாதமொன்றுக்கு 13 இலட்சம் பக்கட்டுகள் தயாரிப்பு



தாய்மார்கள் மற்றும் கர்பிணித் தாய்மார்களுக்கான திரிபோஷா உற்பத்தி மற்றும் விநியோகம் வழமை போன்று முன்னெடுக்கப்படுவதுடன், தற்போது மாதமொன்றுக்கு 13 இலட்சம் திரிபோசா பக்கட்டுகள் தயாரிக்கப்படுவதாகவும், திரி போஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்தார்.

06

## MOB உரமூடைகளின் விலை ஆயிரம் ரூபாவால் குறைப்பு

### இன்று முதல் நடைமுறைக்கு –மஹிந்த அமரவீர



50 கிலோகிராம் MOB உர மூடையொன்றின் விலை இன்று (15) முதல் 1,000 ரூபாயால் குறைக்கப்படவுள்ளதாக, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் (14) காலை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது கமநல சேவை நிலையங்கள் மூலம் 15,000 ரூபாய்க்கு விற்கப்படும் MOBஉர மூடையின் விலை இன்று முதல் 14,000

06

## மலையகத்தில் ஆசிரியர், தாதியர் கல்லூரிகள் அமைக்க வேண்டுகோள்

### இந்தியாவிடம் உதவுமாறு மனோ MP வேண்டுகோள்



கொழும்பு, அவிசாவளை முதல் நுவரெலியாவரை நாடெங்கும் பரந்து வாழும் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் நுட்ப பயிற்சி ஆகியவை தொடர்பாக உதவி செய்ய இந்திய மத்திய அரசாங்கம் உத்தரவாதம் வழங்க வேண்டுமென, தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

'மலையகம் 200' நினைவுறுத்தல் தொடர்பாக இந்தியாவின் பங்களிப்பு இந்த அடிப்படைகளில் அமைய வேண்டுமென்பதுடன், இந்த வருட ஆரம்பத்திலேயே இந்திய தூதுவர்

06

## டெய்லி நியூஸ் துணை ஆசிரியர் கெரி கார்னியர் காலமானார்

### இறுதிக்கிரியைகள் இன்று



சிரேஷ்ட ஊடகவியலாளரும் டெய்லி நியூஸ் பத்திரிகையின் பிரதி ஆசிரியருமான 54 வயதான கெரி கார்னியர்

06

காணாமல் போன

## டென்மார்க் பெண் சடலமாக மீட்பு!



கண்டி, கடுகண்ணாவை, அலகல்ல மலைக்கு மலையேற்றத்துக்காக சென்ற போது, காணாமல் போன 32 வயதுடைய டென்மார்க்கை சேர்ந்த பெண்ணின் சடலம்

06



எரிபொருள் விநியோகம், சேமிப்புக்காக

### சினோபெக் நிறுவனம் BOI யுடன் உடன்படிக்கை கைச்சாத்து

03

போலி வாக்குமூலம் வழங்கிய குற்றச்சாட்டு;

## சுவிஸ் தூதரக அதிகாரிக்கு அபராதத்துடன் சிறை விதிப்பு



குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் போலி வாக்குமூலம் வழங்கிய குற்றச்சாட்டில், அந்தக் குற்றத்தை ஒப்புக்கொண்ட சுவிஸ் தூதரக அதிகாரி கானியா பன்னிஸ்டர் பிரான்சிஸூக்கு நேற்று (14) நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டது.

இதற்கமைய, 5,000 ரூபாய் அபராதமும் 5 வருடங்களுக்கு

06

## நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்பட்டேனா?

### மறுதலித்து சரத் வீரசேகர MP தன்னிலை விளக்கம்



நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் தான் ஒருபோதும் நடந்துகொள்ளவில்லையென, பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தன்னிலை விளக்கமளித்துள்ளார்.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் உரையாற்றிய சந்தர்ப்பத்திலேயே, முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை

06




## இலங்கையில் நடிகர் ரஜனிகாந்த் மாலைதீவுக்கு செல்வதாக தகவல்



மாலைதீவுக்கு செல்லும் நடிகர் ரஜனிகாந்த் நேற்று (14) கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளார்.

மாலைதீவுக்கு செல்லும் வழியில் இலங்கை விமான நிலையம் ஊடாக செல்லும் நோக்கிலேயே நடிகர் ரஜனிகாந்த் இலங்கை வந்துள்ளார்.

06

# சர்வதேச செய்திகள்

## நடிகர்களின் வேலை நிறுத்தத்தால் ஹொலிவுட் திரையுலகம் முடக்கம்

ஹொலிவுட் சினிமா எழுத்தாளர்களின் தொடர் போராட்டத்தில் நடிகர்களும் இணைந்துள்ளதால் கடந்த 63 ஆண்டுளில் முதன்முறையாக ஹொலிவுட் முடங்கியுள்ளது.

ஹொலிவுட் சினிமா எழுத்தாளர்கள் கடந்த சில மாதங்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சம்பளப் பற்றாக்குறை, செயற்கை நுண்ணறிவு அச்சுறுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிராக 'ரைட்டர்ஸ் கில்ட் ஒப் அமெரிக்கா' என்ற அமைப்பு கடந்த மே மாதம் தொடக்கம் போராடி வருகிறது.




இந்த போராட்டத்துக்கு பல்வேறு அமைப்புகளும் ஆதரவு அளித்து வருகின்றன. சினிமா மற்றும் தொலைக்காட்சி தொடர்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் உதவியுடன் கதை எழுதுவதை தடுக்க வேண்டும் என இந்த போராட்டத்தில் வலியுறுத்தப்படுகிறது.

கடந்த 15 ஆண்டுகளில் ஹொலிவுட் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தொடர் எழுத்தாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது இதுவே முதல் முறை.

இந்த போராட்டத்துக்கு ஹொலிவுட் திரைப்பட நடிகர்கள் கூட்டமைப்பும் தற்போது ஆதரவு அளித்துள்ளது. நோலனின் 'ஒப்பன்ஹெய்மெர்' படத்தின் சிறப்பு காட்சி வெளியீட்டு விழா லண்டனில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற நிலையில், அப்படத்தின் நடிகர்களான சிலியன் மர்ஃபி, ரொபர்ட் டவுனி ஜூனியர் உள்ளிட்டோர் விழாவைப் புறக்கணித்து இந்த போராட்டத்துக்கு தங்கள் ஆதரவை தெரிவித்தனர். இதனை கிறிஸ்டோபர் நோலன் விழா மேடையிலேயே அறிவித்தார்.

மேலும், முன்னணி நட்சத்திரங்களான மெரில் ஸ்ட்ரீப், ஜெனிபர் லோரன்ஸ், மேட் டேமன், ஃப்ளோரன்ஸ் பக், ரம மலெக் உள்ளிட்டோரும் இந்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதனால் ஹொலிவுட் துறை கடந்த 63 ஆண்டுகளில் முதன் முறையாக முடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. எழுத்தாளர்கள் போராட்டத்தில் நடிகர்களும் இணைந்துள்ளதால் திரைப்படம், வெப் தொடர்கள் உள்ளிட்டவற்றின் பணிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

நடிகர்களின் வேலைநிறுத்தம் தொழிற்சங்கங்களுடனான தொழிலாளர் ஒப்பந்தங்களின் கீழ் வராத சுயாதீன தயாரிப்புகளைத் தவிர, அமெரிக்காவில் திரைப்படம் மற்றும் ஸ்கிரிப்ட் செய்யப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் அனைத்து தயாரிப்புகளையும் நிறுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

1960இல் நடிகர் ரொனால்ட் ரீகன் போராட்டங்களுக்கு தலைமை தாங்கிய பின்னர், ஹொலிவுட்டில் ஒரே நேரத்தில் இரு தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும். ரொனால்ட் ரீகன் அதன்பின் அமெரிக்காவின் ஜனாதிபதியானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரிசி ஏற்றுமதியை தடை செய்ய இந்தியா பரிசீலனை

உலகின் மிகப் பெரிய அரிசி ஏற்றுமதியாளரான இந்தியா, அதன் பெரும்பாலான அரிசி ரகங்களின் ஏற்றுமதிக்குத் தடை விதிப்பது குறித்துப் பரிசீலித்து வருகிறது.

பாஸ்மதி அல்லாத அனைத்து ரக அரிசி ஏற்றுமதிக்கும் தடை விதிப்பது குறித்து இந்திய அரசாங்கம் ஆலோசிப்பதாகக் கூறப்படுகிறது. 2024ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கு முன் பணவீக்கம் மேலும் அதிகரிக்காமல் தடுக்க அதிகாரிகள் திட்டமிடுவதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் கூறின.

தடை நடப்புக்கு வந்தால் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் 80 வீதமான அரிசி பாதிப்புக்குள்ளாகும் எனக் கருதப்படுகிறது. தடையால் உள்நாட்டில் அரிசி விலை குறையக் கூடும் என்றாலும் உலக சந்தையில் அரிசி விலை மிகவும் உயரக்கூடும்.

உலக மக்களில் 50 வீதத்தினர் அரிசியை உணவில் சேர்த்துக்கொள்கின்றனர். உலகில் விநியோகிக்கப்படும் அரிசியில் சுமார் 90 வீதத்தை ஆசியர்கள் உட்கொள்கின்றனர்.

அரிசி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னிலையில் உள்ளது. உலகளவில் ஏற்றுமதியாகும் அரிசியில் 40 வீதம் இந்தியா பங்களிப்புச் செய்கிறது. சீனா, பெனின்,



செனகல் போன்ற நாடுகள் இந்தியாவில் இருந்து அரசியை இறக்குமதி செய்கின்றன.

எல் நினோ வானிலை நிகழ்வால் பயிர்கள் சேதமடையக்கூடும் என்ற அச்சம் நிலவும் வேளையில் அரிசி விலை ஏற்கனவே இரண்டு ஆண்டு காணாத உச்சத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில், உலக அரிசி வர்த்தகத்தில் கிட்டத்தட்ட 40 வீதத்தை வகிக்கும் இந்தியா சில வகை அரிசி வர்த்தகத்தைக் கடுமையாக்கத் திட்டமிடுகிறது.

முன்னதாக, 2022இல் நொய்யரிசி ஏற்றுமதிக்குத் தடை விதித்த இந்தியா, வெள்ளை, பழுப்பு அரிசி ஏற்றுமதிக்கு 20 வீதம் வரி விதித்தது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் கோதுமை, சோளம் போன்றவற்றின் விலை உயர்ந்த வேளையில் கோதுமை, சீனி ஏற்றுமதிக்கும் அது கட்டுப்பாடு விதித்தது.

## தாய்லாந்து தேர்தலில் வென்ற பிடா பிரதமர் பதவியை ஏற்பதில் தோல்வி

### பாராளுமன்றில் போதிய ஆதரவு இல்லை

தாய்லாந்து பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய சீர்திருத்தவாதியான பிடா லிம்ஜரோயென்ரட், பிரதமர் பதவிக்கு பாராளுமன்றத்தில் போதிய வாக்குகளை பெறத் தவறியுள்ளார்.

கடந்த மே மாதம் நடைபெற்ற தேர்தலில் தாய்லாந்தில் சுமார் ஒரு தசாப்தம் நீடித்த பழைமைவாத இராணுவ ஆட்சியை நிராகரித்த மக்கள் பிடாவின் மூவ் போர்வட் கூட்டணிக்கு பெரும் ஆதரவு வழங்கி இருந்தனர்.

அவருக்கு பாராளுமன்றத்தின் கீழ் அவையில் பெரும்பான்மை கிடைத்தபோதும் தேர்தல் இன்றி தேர்வு செய்யப்படும் செனட்டர்களின் போதுமான ஆதரவை பெறத் தவறியுள்ளார். 249 செனட்டர்களும் முன்னாள் அரசினால் நியமிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

ஹார்வட் பட்டதாரியான 42 வயது பிடா பிரதமராக தேர்வு செய்யப்படுவதற்கு இரு பாராளுமன்ற அவைகளினதும் மொத்தமுள்ள 749 உறுப்பினர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்க வேண்டி இருந்தது.

எனினும் கடந்த வியாழக்கிழமை (13) நடைபெற்ற வாக்கெடுப்பில் 51 வாக்குகள் குறைவாக 324 வாக்குகளே கிடைத்தன.

அந்நாட்டு சட்டத்தின்படி புதிய பிரதமர் தேர்வு செய்யப்படும் வரை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். இதன்படி மற்றொரு வாக்கெடுப்பு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. எனினும் பிடா தனக்கான ஆதரவை அதிகரித்துக் கொள்வதில் தொடர்ந்து சந்தேகம் நிலவி வருகிறது.

பாராளுமன்றத்தில் தமக்கு போதுமான ஆதரவு இல்லாத நிலையில் பிடா, அதிகாரத்தை பெறுவதில் மற்றொரு முட்டுக்கட்டையை எதிர்கொண்டுள்ளார். பழைமைவாத அரசியலமைப்பு நீதிமன்றம் அவருக்கு எதிராக இரு புகார்களை மதிப்பீடு செய்து வருகிறது. இதில் செயலிழந்த ஊடக நிறுவனம் ஒன்றில் அவர் பங்குகளை வைத்திருப்பதான குற்றச்சாட்டும் ஒன்றாகும்.

அதேபோன்று அரச குடும்பத்தை விமர்சித்த நூற்றுக்கணக்கானவர்கள் சிறை செல்லக் காரணமாக உள்ள கடுமையான அரச அவதூறு சட்டத்தில் திருத்தம் கொண்டுவர மூவ் போர்வட் கட்சி திட்டமிட்டிருப்பதாகவும் அவர் மீது மற்றொரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (11) பதவியில் இருந்து வெளியேறிய பிரதமர் பிரயுத் சான் ஒசா அரசியலில் இருந்து ஒய்வை அறிவித்தார். 2014 ஆம் ஆண்டு இராணுவ சதிப்புரட்சி இடம்பெற்றபோது பிரயுத் இராணுவ தளபதியாக இருந்தார்.

தாய்லாந்தில் 2006 தொடக்கம் இடம்பெற்ற இராண்டாவது இராணுவ சதிப்புரட்சியாக இது இருந்தது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் நாட்டின் பலம்மிக்க ஷினவாத்ரா அரசியல் குடும்பத்திற்கு எதிராகவே சதிப்புரட்சி இடம்பெற்றது.

இந்நிலையில் பிட்டாவின் கூட்டணியில் இருக்கு மிகப்பெரிய கட்சிகளில் ஒன்று நாட்டை விட்டு வெளியேறி இருக்கும் முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவாத்ராவின் மகள் தலைமையிலானதாகும்.

பல தசாப்தங்களாக இருந்து வரும் அரச குடும்ப சட்டங்களின் கீழ், அரச குடும்பத்திற்கு எதிராக பேசுபவர்களையும் சிறை வைக்க முடியும். பிரயுத் தலைமையின் கீழ் இந்த சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட்டதோடு இதனை பேச்சு சுதந்திரத்திற்கு எதிராக பயன்படுத்தப்பட்டதாக விமர்சனம் எழுந்தது.

அவரது பதவிக் காலத்தில் வாத்துகளின் நையாண்டி படங்களைக் கொண்ட நாட்காட்டிகளை விற்றவர் மற்றும் நாட்டின் மகாராணி போன்று உடை அணிந்தவர் கூட சிறை வைக்கப்பட்டார்கள்.

பிரயுத்தின் ஆட்சிக் காலம் என்பது தாய்லாந்து தனது தசாப்தத்தை இழந்த காலம் என்று பிடா குறிப்பிடுகிறது. நாட்டின் ஊழல் மற்றும் இராணுவ கிளர்ச்சிகளை முடிவுக்குக் கொண்டுவருவதாக அவர் வாக்குறுதி அளித்துள்ளார்.



இராணுவமயமாக்கலற்ற, ஏக போகமாக்கலற்ற மற்றும் அதிகார பரவலாக்கல் கொண்ட நாட்டை உருவாக்குவதாக அவர் வாக்குறுதி அளித்துள்ளார்.

நாட்டில் முடியாட்சி உத்தியோக பூர்வமாக மதிக்கப்படும் நிலையில் நாட்டின் அரச குடும்ப சட்டங்களில் திருத்தம் கொண்டுவருவதாக கூறிய அவரது தேர்தல் பிரசாரம் அதிகம் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த பிரசாரம் அந்தக் கூட்டணி பாராளுமன்றத்திற்கு செல்லாமல் தடுப்பதற்கு அதன் எதிர்ப்பாளர்கள் கருவியாக பயன்படுத்தி வருகின்றனர். அரச குடும்ப விவகாரத்தில் கைவைப்பதன் மூலம் வன்முறை மற்றும் சிவில் யுத்தம் ஒன்று ஏற்படும் அச்சுறுத்தல் இருப்பதாக சீர்திருத்தவாதிகள் மீது அரச குடும்ப ஆதரவு எம்.பிக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

## நிறம் மாறிவரும் பெருங்கடல்கள்



உலக பெருங்கடல்களின் நிறம் மாறிவருவதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் உலகப் பெருங்கடலில் 56 வீதமான பகுதியின் நிறம் மாறியுள்ளதாக நேச்சர் எனும் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டது. நிலநடுக்கோட்டிற்கு அருகிலுள்ள பெருங்கடல்களில் பச்சை நிறம் அதிகரித்துள்ளது. 2021ஆம் ஆண்டுக்கும் 2022ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் துணைக்கோளம் வழி எடுக்கப்பட்ட காட்சிகள் ஆராயப்பட்டதில் அது தெரியவந்தது.

கடலின் பல்லுயிர் சமூகத்தில் மாற்றம் ஏற்படுகிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

நிறங்களின் மாற்றத்தை மேலும் ஆராய வேண்டும் என்றாலும் அதற்குப் பருவநிலை மாற்றம் காரணமாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறினர்.

மனிதர்களின் செயல்கள் எவ்வகையில் உலக உயிரினங்களைப் பாதிக்கின்றன என்பதற்கு அது ஆதாரமாக விளங்கலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## செயற்கை இனிப்பூட்டி பற்றி சுகாதார அமைப்பு விளக்கம்

செயற்கை இனிப்பூட்டியான 'அஸ்பார்டேம்' புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய 'கார்சினோஜன்' எனப்படும் பொருளின் கீழ் வகைப்படுத்தப்படலாம் என்று உலக சுகாதார அமைப்பைச் சேர்ந்த இரண்டு நிபுணர் குழுக்கள் அறிவித்துள்ளன.

இருப்பினும், ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகளில் அதனை உட்கொள்வது பாதுகாப்பானது என்று அவை கூறின.

ஒரு குழு அந்தப் பொருள் தீங்கு ஏற்படுத்தக்கூடிய ஒன்று என்பதற்கான ஆதாரங்கள் ஏதேனும் உள்ளதா என்பதை ஆய்வு செய்துள்ளது. மற்றொரு குழு, அந்தப் பொருள் எவ்விதத் தீங்கை ஏற்படுத்தும் என்பதை மதிப்பீடு செய்துள்ளது. உலகின் மிகப் பிரபலமான இனிப்பூட்டிகளில் 'அஸ்பார்டேம்'மும் ஒன்று. 'டயட் கோகா–கோலா' பானங்கள், 'மார்ஸ் சுயிங்கம்' போன்றவற்றில் அது பயன்படுத்தப்படுகிறது.

சீனியைத் தவிர்க்க செயற்கை இனிப்பூட்டிகளை உட்கொள்பவர்களுக்கு அண்மைய அறிவிப்பு குறித்து



உலக சுகாதார அமைப்பின் ஊட்டச்சத்துத் துறைத் தலைவர் டொக்டர் பிரான்செஸ்கோ பிரான்கா செய்தியாளர் கூட்டம் ஒன்றில் கூறினார்.

உணவில் சீனியைச் சேர்க்க வேண்டுமா இனிப்பூட்டியைச் சேர்க்க வேண்டுமா என்ற சந்தேகத்தில் உள்ளவர்களுக்கு, மூன்றாவது தீர்வு ஒன்று வழங்கப்பட வேண்டும் என்றார் அவர்.

அவர்கள் அவற்றுக்குப் பதிலாகத் தண்ணீரை அருந்த வேண்டும் என்று டொக்டர் பிரான்கா கூறினார்.

இந்நிலையில், 'அஸ்பார்டேம்' தீங்கு ஏற்படுத்தும் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை என்று உலக சுகாதார அமைப்பைச் சேர்ந்த கூட்டு உணவு, விவசாய அமைப்பு மேற்கொண்ட விரிவான மறுஆய்வில் தெரியவந்தது.

இருப்பினும், ஒருநாளில் 40 மில்லிகிராமுக்கும் குறைவான அளவிலே 'அஸ்பார்டேமை' ஒருவர் உட்கொள்ள வேண்டும் என்று அது பரிந்துரைத்துள்ளது.

## சரக்கு போக்குவரத்து குறித்து இந்தியா, ரஷ்யா, ஈரான் பேச்சு




புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் சர்வதேச வடக்கு–தெற்கு போக்குவரத்து வழித்தடத்தின் ஊடான சரக்கு போக்குவரத்து வசதிகள் குறித்து ஈரான், இந்தியா, ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளது பிரதிநிதிகளும் டெஹ்ரானில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இப்போக்குவரத்து வழித்தடத்தின் ஊடான சரக்கு போக்குவரத்தை மேம்படுத்துவது குறித்து இச்சந்திப்பின் போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி இப்பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் விக்ரம் மிஸ்ரி ஈரானிய வெளிவிவகார அமைச்சர் ஹொசைன் அமீர்–அப்துல்லாஹியனுடன் சந்திப்பொன்றைநடத்தியதாகஈரானிலுள்ள இந்திய தூதரகம் விடுத்துள்ள ட்வீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ரஷ்யாவும் ஈரானும் ஈரானுக்கான ரயில் பாதையை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் அண்மையில் கைச்சார்த்திட்டுள்ளன. ரஷ்ட் அஸ்ட்ரா எனப்படும் இந்த ரயில் பாதை சர்வதேச வடக்கு, தெற்கு போக்குவரத்து வழித்தடத்தின் ஒரு பகுதியாகும். இந்தியா, ஈரான், ரஷ்யா, அசர்பைஜான் உட்பட ஏனைய நாடுகளையும் ரயில் மற்றும் கடல் வழியாக இணைப்பதற்கான ஒரு முக்கிய பாதையாக இது உள்ளது. இவ்வழித்தடம் சுயேஷ் கால்வாய் ஊடாக இடம்பெறும் பாரிய உலகளாவிய வர்த்தகத்திற்கு போட்டியாக அமையும் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 ஜூலை 15 சனிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.39
ளுஹர் - 12.17
அஸர் - 03.44
மஃரிப் - 06.32
இஷா - 07.48

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆணி 31
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## கொழும்பில் கட்டப்படும் தொடர்மாடி வீடுகளில்
# 4,074 குடும்பங்களை உடனடியாக குடியமர்த்துமாறு அமைச்சர் பணிப்பு



### இந்தாண்டு இறுதிக்குள் வீட்டு உரிமைப் பத்திரங்கள் - அமைச்சர் பிரசன்ன அதிகாரிகளுக்கு பணிப்பு

கொழும்பு நகர மறுசீரமைப்புத் திட்டத்துடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்படும் 6 தொடர்மாடி வீட்டுத்தொகுதிகளில் 4,074 குடும்பங்களை உடனடியாக குடியமர்த்துமாறு அதிகாரிகளுக்கு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்தப்படும் குடும்பங்களின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி போன்ற அம்சங்களில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச மற்றும் தனியார் துறைகளை இணைத்து வழிகாட்டுதல்களை வழங்குமாறும், அமைச்சர் தெரிவித்தார்.

இத்திட்டங்கள் தொடர்பாக அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (14) நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இவ்வாறு பணிப்புரைகளை வழங்கினார். கொழும்பு நகர மறுமலர்ச்சித் திட்டத்தின் பங்குதாரர்களுக்கு தெரிவிக்கும் விசேட நிகழ்வில் கலந்துகொண்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனை தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த குறைந்த வருமானம் பெறுவோரை குடி வைப்பதற்காக இந்த அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. அதற்கான நிதியுதவியை ஆசிய உட்கட்டமைப்பு பொது வசதிகள் அபிவிருத்தி வங்கி வழங்கும்.

கொழம்பகே மாவத்தை, ஸ்டேடியம்கம, ஆப்பிள்வத்த, பெர்குசன் வீதி, ஒபேசேகரபுர, மாதம்பிட்டிய ஆகிய பகுதிகளில் இந்த வீட்டுத்தொகுதிகள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இந்த வீடுகளில் ஒவ்வொன்றும் 550 சதுர அடியில் இருக்க வேண்டும், சம்பந்தப்பட்ட வீடு மற்றும் சொத்துக்கான உரிமைப்பத்திரம், இலவச தண்ணீர்/ மின்சார இணைப்பு, வருமான இழப்பு மற்றும் வாழ்வாதார இழப்புக்கான உதவித்தொகை, நிதி மற்றும் இதர உதவித்தொகைகள் இந்த அடுக்குமாடி குடியிருப்புகளின் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்களுக்கு இந்தாண்டு இறுதிக்குள் வீட்டுரிமைப்பத்திரம் வழங்க வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அமைச்சர் பணித்துள்ளார்.

# தேசிய வீடமைப்பு ஆணையாளராக சட்டத்தரணி காமினி பெரேரா நியமனம்



தேசிய வீடமைப்பு ஆணையாளராக சிரேஷ்ட சட்டத்தரணி காமினி பெரேரா, பத்தரமுல்லை செத்சிறிபாயவிலுள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வளாகத்தில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் தலைமையில் நேற்று (14) தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

சமய அனுஷ்டானங்களை அத்துல்கோட்டே ஸ்ரீபரகும்ப பிரிவேனவின் கலாநிதி உடுகல கண்டே ஆரியரத்ன தேரர் மற்றும் அதே பிரிவேனவைச் சேர்ந்த ரிதிபெடிஎல்லே பஞ்சாசர தேரர் ஆகியோர் மேற்கொண்டனர்.

சிரேஷ்ட சட்டத்தரணி காமினி பெரேரா, உயர் நீதிமன்ற சட்டத்தரணி என்பதுடன், அவரது சட்டத்தரணி வாழ்க்கை சுமார் 30 வருடங்களாகின்றன. அமெரிக்க சட்டத்தரணி அசோசியேஷன் உறுப்பினராகவும் அவர் உள்ளார். மனித உரிமைகள் மையத்தின் பணிப்பாளராகவும் மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளராகவும் (போக்குவரத்து) அவர் பதவி வகித்துள்ளார். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள ஓஷன் வியூ டெவலப்மென்ட் நிறுவனத்தின் இயக்குநராகவும் அவர் பணி புரிந்துள்ளார்.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்த, பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) அனோமா விஜேரத்ன, பணிப்பாளர் நாயகம் (பொறியியல் சேவைகள்) வஜிரா அபேவர்த்தன மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

# உடப்பு ஸ்ரீவீரபத்திர காளியம்மன் ஆலயத்தில் நள்ளிரவில் கொள்ளை

## அம்மனின் சுமார் 10 பவுண் தங்க நகைகள் மாயம்

உடப்பு குறூப் நிருபர்



உடப்பு ஸ்ரீவீரபத்திர காளியம்மன் ஆலயத்திலுள்ள அம்மனின் கழுத்தில் அணியப்பட்டிருந்த தங்க நகைகள் மற்றும் உண்டியல் பெட்டிகள் நேற்று (14) அதிகாலை 2.00 மணிக்கு திருட்டுப் போயுள்ளன.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக சி.சி.டி.வி. கமெராவில் குறிப்பிட்ட சில காட்சிகள் காணப்படுவதுடன், அவை பரிசீலனை செய்யப்படுவதாகவும், உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக உடப்பு பொலிஸ் நிலையத்தில் பரிபாலன சபையின் தலைவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

"அம்மனின் இரண்டு கண் மலர்கள், நெற்றிப்பட்டம் ஒன்று, அம்மனின் கொடி, மூக்குத்தி போன்றவை திருடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சுமார் 10 பவுண் கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆலய பூசகர் நேற்றுக் காலை (14) ஆலயத்துக்குச் சென்ற போது, அங்கு கதவுகளின் பூட்டு உடைக்கப்பட்டதைக் கண்டு, திருட்டு நடந்துள்ளமையை உறுதிப்படுத்திக் கொண்டார்.

உடனடியாக ஆலய பரிபாலன சபையின் தலைவரின் கவனத்துக்கு அவர் கொண்டு வந்ததையிட்டு, அதன் பின்னர் உடப்பு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் குழு மூலம் விசாரணை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# இலங்கையில் விரைவில் 5ஜி அறிமுகமாகிறது

## இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவிப்பு



இலங்கையில் அடுத்த வருட ஆரம்பத்தில் 5ஜி தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படுமென, தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

Digi–Econ வேலைத்திட்டம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்படுமெனவும், ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தார். டிஜிட்டல் பொருளாதார ஒழுங்குபடுத்தல் கொள்கைப் பொறிமுறையொன்றை உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளாகவும் முதற்கட்டமாக டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கும் பணிகள் துரிதப்படுத்தப்படுமெனவும், இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

### சம்பளம் இன்றி விடுமுறை
# அரச ஊழியர்களுக்கு அரசு சலுகை வழங்கல்

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளமின்றி விடுமுறை எடுக்கும் முறையொன்றை பொது நிர்வாக அமைச்சு அறிமுகம் செய்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ளது. இதற்கமைய, உரிய விடுமுறை எடுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு வெளிநாடு செல்ல அல்லது இலங்கையில் தங்க வாய்ப்பு கிடைக்கும்.

அந்தந்த விடுமுறையை எடுக்கும் போது, அவர்களின் வயது மூப்பு அல்லது ஓய்வூதியத்துக்கு எந்தத் தடையும் இருக்காதென, பொது நிர்வாக அமைச்சு தெரிவித்தது.

# முதியோரை கட்டிவைத்து பணம், நகை கொள்ளை

## சீதுவை பகுதியில் துணிகர சம்பவம் பதிவு

சீதுவை, லியனகேமுல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வயோதிபர்கள் இருவர் உட்பட மூவரை கட்டி வைத்து விட்டு பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையிட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் (13) இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக சீதுவை பொலிஸில் பாதிக்கப்பட்ட 75 வயதுடைய வயோதிபப் பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சீதுவை, லியனகேமுல்ல பிரதேசத்திலுள்ள வீட்டுத்தொகுதியில் வசித்து வரும் ஒருவரும் அவரது மகளும் ஒன்றாக இணைந்து, தனது மகளை துணியால் கட்டி வைத்து விட்டு, தங்க நகைகள் மற்றும் சொத்துகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவதினமான நேற்று முன்தினம் தனது மகள் அலறி துடித்ததால், அவரது படுக்கை அறைக்கு சென்ற போது, யாரோ கழுத்தை நெரிப்பதை தான் கண்டதாகவும், இதன் பின்னர் தனது வயதான கணவரும் மகளின் படுக்கை அறைக்கு வந்ததாகவும் அப்போது, அந்த அறையில் பதுங்கியிருந்த நபரொருவர் தங்கள் மூவரையும் கட்டிப் போட்டார்.

பின்னர், தமது வீட்டிலிருந்த தங்க நகைகள் மற்றும் பணத்தை அந்த மர்ம நபர் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்" எனத் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரை கைது செய்வதற்காக சீதுவை பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினர் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

# பிரமிட் திட்டம் மூலம் மோசடியென முறைப்பாடு; ஆறு பேரின் வங்கிக் கணக்குகள் முடக்கம்

பிரமிட் திட்டமென்று நம்பப்படும் தனியார் நிறுவனமொன்றின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஆறு பேரின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, அடையாளம் காணப்பட்ட ஆறு பேரின் வங்கிக் கணக்குகள், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் முடக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதற்கமைய, சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்குகளின் வைப்புத் தொகை 790 மில்லியன் ரூபாயை உள்ளடக்கிய 95 கணக்குகள் இதுவரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில்,

06

## யாழில் இளைஞன் உயிர் மாய்த்த சம்பவம்
# வாக்குமூலமளிக்க பொலிஸ் நிலையம் சென்ற வயோதிபப் பெண் உயிரிழப்பு

## யாழ். பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள வீடொன்றில் வாடகைக்கு தங்கியிருந்த மல்லாவி, துணுக்காய் பிரதேசத்தைச் சேர்ந்த ஜே.தேவரஞ்சன் (வயது 31) எனும் இளைஞன் கடந்த புதன்கிழமை இரவு உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் வழங்கச் சென்ற வயோதிபப் பெண்ணொருவர் பொலிஸ் நிலையத்துக்குள்ளேயே மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இளைஞன் உயிர் மாய்த்த சம்பவம் தொடர்பாக விசாரணையை முன்னெடுத்த யாழ். பொலிஸார், இளைஞன் தங்கியிருந்த வீட்டில் மற்றுமொரு அறையில் தங்கியிருந்த அவ் வயோதிபப் பெண்ணை வாக்குமூலம் வழங்க வருமாறு நேற்று முன்தினம் (13) யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைத்திருந்தனர் .

இதற்கமைய வாக்குமூலம் வழங்க பொலிஸ் நிலையம் சென்ற இப்பெண், திடீர் சுகவீனமுற்று பொலிஸ் நிலையத்தில் மயங்கி விழுந்துள்ளார். இதனையடுத்து, யாழ். போதனா வைத்தியசாலைக்கு இப்பெண்ணை கொண்டு சென்ற போது, அவர் உயிரிழந்து விட்டதாக, வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மரண விசாரணையை மேற்கொண்டார்.

இந்த வயோதிபப் பெண்ணின் உறவினர்கள் கொழும்பில் வசித்து வரும் அதேவேளை, யாழ்ப்பாணத்தில் அவர் தனியாக வசித்து வந்ததாகவும் அவருக்கு 75 வயதென்பதுடன், அவரை மலரென அழைப்பதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

இதேவேளை, உயிரை மாய்த்துக்கொண்ட இளைஞன், கடந்த சில தினங்களாக மன விரக்தியில் காணப்பட்டதாகவும் கடந்த புதன்கிழமை இரவு அவர் வாந்தி எடுத்ததாகவும் தான் அவருக்கு தேநீர் தயாரித்துக் கொடுத்துவிட்டு, உறக்கத்துக்குச் சென்ற பின்னர், இளைஞன் இவ்வாறான முடிவெடுத்து உயிர் மாய்ப்பாரென தான் எதிர்பார்க்கவில்லையெனவும் வயோதிபப் பெண் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். இளைஞனின் மரணம் காரணமாக அவர் பெரும் கவலையில் இருந்தாரென, பொலிஸார் தெரிவித்தனர்.

### எரிபொருள் விநியோகம், சேமிப்புக்காக
# சினோபெக் நிறுவனம் BOI யுடன் உடன்படிக்கை கைச்சாத்து



சினோபெக் எனர்ஜி லங்கா பிரைவட் லிமிடெட், இலங்கை முதலீட்டுச் சபையுடன் எரிபொருள் விநியோகத்துக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் சினோபெக் எனர்ஜி நிறுவனம், இலங்கையில் எரிபொருளை விநியோகிக்கவும் எரிபொருளை சேமிக்கவும் மற்றும் எரிபொருள் நிலையங்களை அமைக்கவும் அனுமதிக்கப்படுகிறது.

இதற்காக நிறுவனம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்து, அதன் மூலம் இலங்கையில் 50 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவி, தற்போதுள்ள 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இணைக்கும் வலையமைப்பை செயற்படுத்தவுள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.42 | 214.02 |
| கனடியன் டொலர் | 226.74 | 240.83 |
| யூரோ | 331.60 | 350.03 |
| ஜப்பான் யென் | 2.1241 | 2.2376 |
| சிங்கப்பூர் டொலர் | 224.04 | 237.14 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 388.30 | 408.92 |
| சுவிஸ் பிராங்க் | 338.21 | 360.12 |
| அமெரிக்க டொலர் | 304.02 | 318.23 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 826.29 | கட்டார் ரியால் | 85.48 |
| குவைத் டினார் | 1015.01 | சவூதி ரியால் | 83.03 |
| ஓமான் ரியால் | 809.14 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 84.81 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 31ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 26

### குறள் தரும் சிந்தனை



உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால் நாற்கூற்றே மருந்து

நோயாளி, மருத்துவர், மருந்து, அருகிருந்து துணைபுரிபவர் என மருத்துவமுறை நான்கு வகையாக அமைந்துள்ளது.

# இந்தியாவுடனான நட்புறவினால் இலங்கைக்கு அதிக அனுகூலங்கள்

இலங்கையும் இந்தியாவும் வரலாற்றுக் காலம் முதல் நெருங்கிய நட்புறவு கொண்ட நாடுகளாகும். இவ்விரு நாடுகளும் பிரித்தானியரால் கைப்பற்றப்படுவதற்கு முன்னர் பண்டைய மன்னர்களின் ஆட்சிக்காலத்தின் போதும், இருநாடுகளுக்குமிடையே நெருங்கிய நட்புறவு நிலவி வந்தமைக்கு உறுதியான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன.

பிரித்தானியரின் ஆட்சி மலர்வதற்கு முன்னர் இலங்கையும் இந்தியாவும் தனியான நாடுகளாக இருக்கவில்லை. பல இராச்சியங்களாக அவை இருந்தன. அவ்வாறு இராச்சியங்கள் நிலவிய காலத்தில் இலங்கையின் பண்டைய மன்னர்களுக்கும், தென்னிந்திய பண்டைய மன்னர்களுக்கும் இடையே நெருங்கிய நட்புறவு நிலவியதாக வரலாற்று மூலாதாரங்கள் கூறுகின்றன.

இலங்கையின் பண்டைய மன்னர்களும் தென்னிந்திய மன்னர்களும் திருமண சம்பந்தங்களையும் ஏற்படுத்திக் கொண்டதாக எமது வரலாற்று இலக்கிய ஆதார நூல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை வட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலும் பண்டைய காலத்தில் நட்புறவுகள் நிலவியதாக தகவல்கள் உள்ளன.

வரலாற்றுரீதியில் நிலவி வந்த அவ்வாறான நெருங்கிய நட்பு இன்றுவரை இருநாடுகளுக்கிடையிலும் நிலவி வருகின்றது. இருநாடுகளிலும் அவ்வப்போது அரசியல் மாற்றங்கள் ஏற்படுகின்ற போதிலும், நட்புறவு குலையாமல் நீடித்தபடியே வருகின்றது. இந்தியாவின் நலன்களுக்கு இசைவாகவே இலங்கை தனது கோட்பாடுகளை வகுத்துக் கொள்கின்றது. அதே போன்று இலங்கையின் நலன்களுக்கு விரோதமாக இந்தியா ஒருபோதுமே நடந்து கொண்டதில்லை.

இலங்கைக்கு இன்னல்கள் தோன்றுகின்ற போதெல்லாம் விரைந்தோடி வந்து உதவியும் ஒத்துழைப்பும் வழங்குகின்ற அயல்தேசம் இந்தியா ஆகும். அதற்கான உதாரணங்களாக பல நிகழ்வுகளைக் குறிப்பிட முடியும். இலங்கையில் கொவிட் தொற்று தீவிரமடைந்த வேளையில் எமது நாட்டுக்கு முதன் முதலாக தடுப்பூசி மருந்தை வழங்கிய நாடு இந்தியா ஆகும். அதன் காரணமாகவே கொவிட் தொற்றில் இருந்து இலங்கையினால் விரைவில் மீண்டெழுவதற்கு முடியுமாகவிருந்தது. அதற்காக இந்தியாவுக்கு இலங்கை மக்கள் அனைவருமே நன்றி தெரிவித்திருந்தனர்.

கொவிட் தொற்று தணிவுநிலைமைக்கு வந்ததன் பின்னர் அரசியல் நெருக்கடி உருவானது. அதன் காரணமாக நாட்டில் பொருளாதார நெருக்கடி தலைதூக்கியது. இலங்கையில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்ததும் இந்தியா பலவழிகளிலும் வழங்கிய உதவிகளை இலகுவில் மறந்துவிட முடியாது. பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களை இலவசமாகவும் இலகுகடன் அடிப்படையிலும் வழங்கியதன் மூலம் இலங்கை மக்களின் இன்னல் தீர்ப்பதற்கு இந்தியா முன்வந்தது.

மருந்துப் பொருட்கள், கடனுதவி உட்பட இந்தியா வழங்கியிருந்த உதவிகள் அதிகம். பொருளாதார நெருக்கடி உச்சத்தில் நிலவிய வேளையில் இந்தியாவின் உதவிகள் எமக்குப் பெரும் ஆறுதலாக இருந்தன. இந்தியா அவ்வேளையில் பிரதிபலன் எதையுமே எதிர்பார்த்திருக்கவில்லை. 'அயல்தேசத்துக்கு முன்னுரிமை' என்பதே இந்தியாவின் அசைக்க முடியாத கொள்கையாக இருந்தது.

இந்தியா அவ்வேளையில் தனது கொள்கையை வெளிப்படையாகவே தெரிவித்திருந்தமை நினைவிருக்கலாம்.

'இலங்கை எமது சகோதரநாடு. இலங்கைக்கு இன்னல் வருகின்ற வேளைகளில் இந்தியா ஓடோடி வந்து உதவி புரியும்' என்று புதுடில்லி அவ்வேளையில் குறிப்பிட்டிருந்தது. புதுடில்லி மாத்திரமன்றி, தமிழ்நாடு அரசும் இலங்கை மக்களுக்கென பொருளாதார நெருக்கடி வேளையில் உணவுப் பொருட்களை இலவசமாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை மீதும் எமது நாட்டு மக்கள் மீதும் இந்தியா உண்மையான அபிமானம் கொண்டுள்ளதென்பதையே இந்த நிகழ்வுகள் எமக்கு உணர்த்துகின்றன. இந்தியாவின் இவ்வாறான அக்கறையை நாம் பாராட்டுகின்ற அதேவேளை, இருநாடுகளுக்கிடையிலான நட்புறவுகள் மென்மேலும் வலுவடைய வேண்டுமென்பதே இங்கு பிரதானமாகும்.

இந்துசமுத்திர பிராந்தியத்தில் இந்தியா சக்திமிக்க நாடாக விளங்குகின்றது. பொருளாதாரத்திலும் ஆயுத வல்லமையிலும் இந்தியா மிகவும் சக்திமிக்க நாடாகும். உலக பொருளாதாரத்தில் இந்தியா ஐந்தாவது இடத்துக்கு வந்துள்ளது. இன்னும் ஓரிரு வருடங்களில் உலக பொருளாதாரத்தில் இந்தியா மூன்றாவது இடத்துக்கு வந்துவிடுமென்று சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மிகவும் வேகமானது.

இந்தியாவின் ஒத்துழைப்புடன் இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து கொள்வதில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பது பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும். இவ்வாறான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதப் பிற்பகுதியில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கின்றார். ஜனாதிபதியின் அவ்விஜயத்துக்கு முன்னோடியாக இந்திய வெளியுறவுச் செயலாளர் சில தினங்களுக்கு முன்னர் கொழும்புக்கு வருகை தந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசாங்க முக்கியஸ்தர்கள் பலரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பயனாக இருநாடுகளுக்குமிடையில் நட்புறவு மேலும் வலுவடையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறான நம்பிக்கையை இந்திய வெளியுறவுச் செயலாளரும் வெளியிட்டுள்ளார். இந்தியாவுடனான நட்புறவென்பது இலங்கையின் வளர்ச்சிக்கு உதவுமென்பதை நாம் மறந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# வேற்றுக்கிரகவாசிகள் எங்காவது உள்ளனரா?



ஏலியன்ஸ்கள் எனப்படும் வேற்றுக்கிரகவாசிகள் எங்காவது இருக்கிறார்களா என்பது குறித்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ அமைப்பின் முன்னாள் தலைவர் சிவன் விளக்கம் அளித்துள்ளார்.

வெளிநாடுகளில் ஏலியன்கள் குறித்த நம்பிக்கை இருந்து வருகிறது. அது அவர்கள் எடுக்கும் திரைப்படங்களிலும் வெளிப்படுகிறது.

"அவ்வப்போது வானில் பறக்கும் தட்டை பார்த்தேன், என் கமராவில் வித்தியாசமான உருவம் உள்ளது, நீளமான தலை கொண்ட மனிதனை வானில் பார்த்தேன்" என்றெல்லாம் பலர் சொல்லி அதை செய்திகளாக படித்துள்ளோம்.

ஆனால் இன்னமும் ஏலியன்களுக்கான தேடல் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த நிலையில் சந்திரயான் 3 விண்கலத்தை விண்ணில் செலுத்துவதற்கான கவுன்ட்டவுன் நேற்றுமுன்தினம் தொடங்கியது. அதனையடுத்து விண்கலம் நேற்று ஏவப்பட்டது. இதுகுறித்து இஸ்ரோவின் முன்னாள் தலைவராக இருந்த சிவன் அளித்த பேட்டியில் கூறுகையில், "சந்திரயான் 1 க்கும் சந்திரயான் 2 க்கும் இடையே நீண்ட இடைவெளிக்கான காரணம் தொழில்நுட்பத்தை கட்டமைத்தோம். ஆனல் சந்திரயான் 2 மற்றும் சந்திரயான் 3க்கு இடையே கால இடைவெளி ஏன் குறைவு என்றால் இரண்டுமே ஒன்றுதான். ஆனால் தொழில்நுட்பத்தை மட்டுமே மேம்படுத்தியுள்ளனர். மங்கல்யான் 1 செயலிழந்து விட்டது. மங்கல்யான் 2 வை விண்ணில் செலுத்த ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.



இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் சிவன் கூறும் விளக்கம்!

அதுபோல் வேற்றுகிரகங்களான வெள்ளி கிரகத்திற்கு செல்ல திட்டங்கள் முடிவாகிக் கொண்டிருக்கிறது. ஏலியன்கள் இருக்கலாம் என்ற நம்பிக்கையின் பேரில் உலகில் உள்ள விஞ்ஞானிகள் தேடுகிறார்கள். பூமியைப் போல் இன்னொரு கிரகம் இருக்கலாம். அப்படி இன்னொரு கிரகம் இருந்தால் அங்கு ஏலியன்கள் இருக்கலாம் என்ற நம்பிக்கையில்தான் தேடுகிறார்கள். ஆனால் இதுவரை ஒன்றும் முடிவாகவில்லை. இஸ்ரோவின் முயற்சிகள் ஏலியன்களை கண்டுபிடிக்கும் முயற்சிகள் போல் இல்லை. நமது முயற்சிகள் அறிவியலை நோக்கித்தான் இருக்கிறது. நிலவின் ஆரிஜின், அங்குள்ள கனிம வளங்கள் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்து வருகிறோம்.

மாணவர்கள் விஞ்ஞானியாக வேண்டும் என்றால், அவர்களுக்கு அறிவியல் மீது அதீத ஆர்வம் இருக்க வேண்டும். எந்த விஷயமாக இருந்தாலும் அதை Why, what, how என துருவி துருவி கேட்க வேண்டும். விஞ்ஞானியாக வேண்டும் என்றால் உத்வேகம் இருக்க வேண்டும். சிறிய வயதில் ஆசிரியர் ஆக வேண்டும், கல்லூரி படிக்கும் போது ஏரோநோட்டிக்கல் பொறியியலாளராக வேண்டும் என்ற கனவுகள் எனக்கு இருந்தது. ஆனால் எம்.இ. படிக்கும் போதுதான் விண்வெளி விஞ்ஞானியாக வேண்டும் என்ற ஆசை வந்தது" என்று சிவன் தெரிவித்தார்.

# ஆடி அமாவாசை ஓகஸ்ட் 16ஆம் திகதி என்பதில் குழப்பம் எதுவும் கிடையாது!

ஆடி மாதத்தில் இரண்டு தினங்களை உள்ளடக்கி அமாவாசை வருவதால் சாஸ்திர சம்பிரதாயங்களின்படி பிந்திய 16 ஆம் திகதியே பிதிர்க்கடன் செலுத்தி தீர்த்தமாடுவதற்குரிய பொருத்தமான தினமாகும் என்று சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி மற்றும் கிழக்கின் பிரபல சிவாச்சாரியார் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் கூறுகின்றனர்.

இந்த ஆண்டு ஜூலை 17 ஆம் திகதி சூரியன் மிதுன ராசியிலிருந்து கடக ராசிக்கு மாறுகிறார். அன்றைய தினமே ஆடி மாதம் பிறக்கிறது. அன்றைய தினம் அமாவாசையும் சேர்ந்து வருகிறது. மாதப்பிறப்பு, தக்ஷிணாயனம், அமாவாசை என்று மூன்று புண்ணிய காலங்கள் இணைந்த ஆடிப் பண்டிகையை இந்தாண்டு கண்டு களிக்க உள்ளோம்.

மேலும், ஆடி மாதம் 31ம் திகதி (ஓகஸ்ட் 16ம் திகதி) மீண்டும் அமாவாசை வருகிறது. இப்படி ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசை தினங்கள் வருகிற போது, ஆடி அமாவாசை எனும் சிறப்பு எதற்கு உண்டு ?

எல்லோருக்கும் ஏற்படும் ஐயம் தானே? அது ஏன்?



சித்தர்கள் குரல் சங்கர் ஜி, மகேஸ்வரகுருக்கள் ஆகியோர் விளக்கம்

நாம் நம் முன்னோர்களை வணங்கி வழிபடுவதால் நமக்கு அத்தகைய கேள்வி எழுகிறது. ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசையோ, பவுர்ணமியோ, வந்தால் முதலில் வருவதை விட்டு விட்டு, பின்னதையே சிறப்புடையதாக ஏற்க வேண்டும் என்கிறது சாஸ்திரம்.

பூர்வம் த்யக்த்வா பரம் க்ராஹ்ய என்பது வாக்கியம். இதன்படி, பூர்வம் என்கிற முதலாவதை விட்டு விட்டு, பரம் என்கிற பின்னால் வருவதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அதன் பொருள்.

எனவே, ஆடி முதல் திகதியில் வரும் அமாவாசையை சாதாரணமாக தர்ப்பணம் செய்யும் நாளாகவும், ஆடி 31 ம் திகதி வரும் அமாவாசையை சிறப்புடைய ஆடி அமாவாசையாகக் கொண்டு, கடல் ஆறு, குளக்கரைகளில் தர்ப்பணம், தானம் முதலியன செய்து முன்னோரின் ஆசியைப் பெறுவோமாக என்று அவ்விருவரும் தெரிவித்துள்ளனர்.

**வி.ரி.சகாதேவராஜா...**

# மரத்தால் வீழ்ந்து மரணமான குடும்பஸ்தரின் குடும்பத்துக்கு ரூபா ஒரு இலட்சம் நிதியுதவி

அம்பாறை, சவளக்கடை பொலிஸ் பிரிவில் குடும்பஸ்தர் ஒருவர் தென்னை மரத்தில் ஏறி தேங்காய் பறிக்கும் போது தவறி விழுந்து உயிரிழந்தார். அவரது வீட்டுக்கு சென்ற ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் தியாகி அறக்கொடை நிதியத்தின் இணைப்பாளருமான ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் விபரங்களைக் கேட்டறிந்ததுடன், அவர்களுக்கான உதவிகளுக்கான சிபாரிசினையும் மேற்கொண்டிருந்தார்.

குறித்த சம்பவத்தில் கல்குடா பொலிஸ் பிரிவில் பாடசாலை வீதி, பேத்தாழை எனும் நிரந்தர வசிப்பிடத்தைக்கொண்ட 2 பிள்ளைகளின் தந்தையான புஸ்பராசா ரெட்ணராசா வயது (33) என்பவரே கடந்த 04.06.2023 ஆம் திகதின்று இவ்வாறு பரிதாபமாக உரிழந்தவராவார்.

தனது குடும்ப கஷ்ட நிலைமை காரணமாக அவர் தினக்கூலிக்காக தென்னை மரத்தில் ஏறும் தொழில் செய்து வந்தார். அதன் மூலம் கிடைக்கும் சிறிய வருமானத்தினைக் கொண்டு ஜீவனோபாயம் நடத்தி வந்த இவரது குடும்பம் எவ்விதமான வருமான வழிகளின்றி கடன் தொல்லைகளினால் பரிதவித்தது.

ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் பணிப்பாளர் பாரிஸ், தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்றதன் மறுகணமே அக்குடும்பத்துக்கு முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபாய் ஊடகவியலாளர் பாரிஸ் ஊடாக கையளிக்கப்பட்டது. அத்துடன், தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் மரணித்த நபர் பெற்ற கடனை தீர்ப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.





தியாகி அறக்கொடை நிதியம் வழங்கியது

மரணமானவரின் பிள்ளைகளான ரெ.தனுஷ்காந் வயது 5ம் தரத்திலும், ரெ.கிசோக் வயது (04) முன்பள்ளியிலும் கல்வி கற்று வருவதுடன், இவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு தாம் தொடர்ந்தும் உதவப்போவதாக தியாகி அறக்கொடை நிதியத்தில் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் குறித்த குடும்பத்தினரிடம் தொலைபேசியில் மூலமாகத் தெரிவித்தார். பாரிஸ் விடுத்த அழைப்பின் பேரில் வாழைச்சேனை பிரதேச உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எல். எம்.ஜெமீல், வாழைச்சேனை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி லசந்த பண்டார மற்றும் ஓட்டமாவடி வர்த்தக சங்கத்தலைவர் ஏ.சீ.எம்.நியாஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு இவ்வுதவித்தொகையினை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது, குறித்த குடும்பத்தினரால் தியாகி ஐயாவின் நினைவாக பயன்தரும் தென்னை மரக்கன்றும் அதிதிகளினால் நடுவதற்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தில் மூழ்கியது புதுடில்லி; முக்கிய பல வீதிகள் மூடப்பட்டன!

டெல்லியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ராஜ்காட் பகுதி, டெல்லி சட்டசபை பகுதி, செங்கோட்டை, முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் வீடு உள்ள வீதிகளில் தண்ணீர் தேங்கி உள்ளது. டெல்லியில் யமுனை ஆற்றின் கரையோர பகுதிகளில் வெள்ளம் அதிகரித்துள்ளது. மழை ஓய்ந்தும் யமுனை ஆற்றில் அபாய அளவை தாண்டி பாயும் வெள்ளம் காரணமாக வீதிக்குள் தண்ணீர் தேங்கி உள்ளது. நீர் சூழ்ந்ததால் வீதிகள், குடியிருப்புகள் பலவும் குளம் போல் மாறி உள்ளன.

வீதிகளில் தண்ணீர் தேங்கி உள்ளதால் மக்கள் கடுமையான அவதிக்கு உள்ளாகி உள்ளனர். காந்தி நினைவிடம் உள்ள ராஜ்காட் பகுதியில் கூட தண்ணீர் தேங்கி வெள்ளம் ஏற்பட்டுள்ளது. டெல்லியில் சிவில் லைன்ஸ் பகுதியில் உள்ள ரிங் ரோட் தற்போது வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக மஜ்னு கா திலா பகுதி மற்றும் காஷ்மீரி கேட் ISBT உடன் இணைக்கும் வீதி மொத்தமாக மூடப்பட்டுள்ளது. இது அதிக மக்கள், முக்கியமாக அரசியல் தலைவர்கள் பயணம் செய்யும் வீதி ஆகும். இந்த பாதிக்கப்பட்ட பகுதி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் வீட்டிற்கு மிக அருகில் உள்ள பகுதி ஆகும். அதேபோல் டெல்லி சட்டசபைக்கு 500 மீட்டர் தொலைவில் இந்த பகுதி அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



உச்ச நீதிமன்றத்தின் நுழைவு வாசல் பகுதி வரை வெள்ளம் ஏற்பட்டு உள்ளதும் குறிப்பிடத்தக்கது. தேசிய தலைநகரின் பல பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளதால், அனைத்து கல்லூரிகளுக்கும் ஞாயிற்றுக்கிழமை வரை விடுமுறை அளிக்கப்படும் என டெல்லி அறிவித்துள்ளது. டெல்லி ஐடிஓ, செங்கோட்டை, யமுனா பேங்க் மெட்ரோ மற்றும் ராஜ்காட் ஆகியவை டெல்லியில் பலத்த மழைக்கு மத்தியில் மிகவும் அதிக அளவில் பாதிக்கப்பட்ட பகுதிகள் ஆகும். இங்குதான் வெள்ளம் அதிக அளவில் தேங்கி உள்ளது.

முக்கியமாக டெல்லியின் செங்கோட்டை பகுதியின் வாசல் வரை வெள்ளம் வந்துள்ளது. செங்கோட்டை இருக்கும் பகுதியே தாழ்வான பகுதி ஆகும். இந்த வெள்ளம் காரணமாக சிவில் லைன்ஸ், நிகாம் போத் காட், போட் கிளப், பாண்டவ் நகர் பகுதிகளில் போக்குவரத்து மொத்தமாக நிறுத்தப்பட்டு உள்ளது. இதனால் மக்கள் பணிக்கு செல்லாமல் வீட்டிற்குள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

1982 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜூலை மாதத்தில் ஒரே நாளில் அதிக மழையை டெல்லி பதிவு செய்துள்ளது.

# நிலவுக்குச் செல்லும் சந்திரயான்–3 விண்கலத்துக்காக நாமக்கல் கிராமத்தில் இருந்து பெறப்பட்ட மணல்!



சந்திரயான்_3 திட்டத்தின் ரோவர் மற்றும் லேண்டரை நிலவின் தரையில் தரையிறக்குவதற்காக நாமக்கல்லில் இருந்து மண் எடுத்து வந்து இஸ்ரோவில் பயிற்சி மேற்கொண்டுள்ளனர். கடந்த ஜூலை 22, 2019 ஆம் ஆண்டு நிலவின் தென் துருவப்பகுதியை ஆய்வு செய்வதற்காக சந்திரயான்_ 2 விண்ணில் செலுத்தப்பட்டது.

சந்திராயன் 2 இல் இருக்கும் ஓர்பிட்டர் அதே வருடம் செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி நிலவின் வட்டப்பாதையில் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டது. ஆனால் அதன் லேண்டர் விக்ரம் தரையில் இறங்கும் முன்னர் 2.1 கி.மீ தூரத்தில் சிக்னலை இழந்தது. அதன்பின்னர்தான் நிலவின் தென்துருவப் பகுதியில் சந்திரயான் 2 இன் விக்ரம் லேண்டர் விழுந்து நொருங்கியமை கண்டுபிடிக்கப்பட்டது.

மூன்று மாதங்களாக இஸ்ரோ அதனை தீவிரமாக தேடியது. அதன்பின் இதை நாசா கண்டுபிடித்தது. நாசாவின் LROC (Lunar Reconnaissance Orbiter) விண்கல ஆய்வுக்கருவி மூலம் இது கண்டுபிடிக்கப்பட்டது. லேண்டர் இறங்காத காரணத்தால் உள்ளே இருக்கும் ரோவரும் வெடித்து சிதறியது. ஆனாலும் இந்த திட்டம் முழு தோல்வி அடையவில்லை. காரணம் ஓர்பிட்டர் வெற்றிகரமாக அடுத்த ஒன்றரை வருடம் நிலவைச் சுற்றியது.

இதையடுத்து தற்போது சந்திரயான் 3 திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. விக்ரம் லேண்டர், பிரக்யான் ரோவர் இரண்டையும் மீண்டும் நிலவில் வெற்றிகரமாக களமிறக்கும் திட்டத்தில் இஸ்ரோ களமிறங்கி உள்ளது. தற்போது சந்திரயான் 3 திட்டத்தில் சந்திரயான் 2 இல் இருந்தது போல ஓர்பிட்டர் இருக்காது. மாறாக விக்ரம் லேண்டர், பிரக்யான் ரோவர் இரண்டு மட்டுமே உள்ளன. இதில் ப்ரோபல்ஷன் மொடல் என்ற ஒரு உந்த கூடிய ப்ரோபல்ஷன் என்ற பகுதியும் உள்ளது. இந்த சந்திரயான் 3 திட்டத்தின் ரோவர் மற்றும் லேண்டர் நிலவின் தரையில் தரையிறங்குவதற்காக இந்தியாவிலேயே இஸ்ரோ ஆய்வு மையங்களில் பயிற்சிகள் செய்யப்பட்டன. இந்த இரண்டும் நிலவில் இறங்குவதற்காக பூமியில் வைத்து சோதனைகள் செய்யப்பட்டன. இதனால் இஸ்ரோ பூமியிலேயே நிலவு போன்ற சுற்றுச்சூழலை ஏற்படுத்தி ஆராய்ச்சிக் கூடத்தில் வைத்து ஆராய்ச்சியை செய்தது. அதாவது ஆராய்ச்சி கூடத்தில் நிலவில் இருப்பது போலவே ஈர்ப்பு விசை வைத்து, அங்கு இருக்கும் வாயுக்களை மட்டும் பயன்படுத்தி, விக்ரம் லேண்டர் சரியாக இறங்குகிறதா என்று சோதனை செய்தது. இதற்காக நிலவில் இருப்பது போல தரையும், மண்ணும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஒருசதம் கூட பணம் வாங்காமல் சந்திரனின் ஆய்வுக்கு மகிழ்ச்சியுடன் பங்களித்த கிராமத்து மக்கள்!

ஏற்கனவே நிலவில் ஆராய்ச்சி செய்ய சந்திரயான் 1ஐ அனுப்பிய போது இஸ்ரோ நாசாவிடம் இருந்து மண் வாங்கியது. இது நிலவில் இருப்பதை போலவே இருக்கும் மண் ஆகும். மொத்தம் 10 கிலோ மண்ணை இஸ்ரோ வாங்கியது. இதன் ஒரு கிலோ 150 டொலருக்கு வாங்கப்பட்டது. ஆனால் சந்திரயான் 2 இற்கு 60 கிலோ வரை இந்த மணல் தேவைப்பட்டது. அதனால் அப்போது இஸ்ரோ நாசாவை நம்பவில்லை. பட்ஜெட் காரணங்களால் இந்தியா நாசாவிடம் இருந்து மணல் வாங்கவில்லை. அதற்குப் பதிலாக நாமக்கல் பகுதியில் உள்ள இரண்டு கிராமங்களில் இருந்து இஸ்ரோ மண் வாங்கி உள்ளது. அதே மண்ணைத்தான் இப்போது சந்திரயான் 3 திட்டத்திற்கும் இஸ்ரோ பயன்படுத்தி உள்ளது.

நாமக்கல்லில் உள்ள சிட்டாம்பூண்டி, குன்னமலை ஆகிய கிராமங்களில் இருந்து மண் வாங்கி உள்ளது. இங்கு இருக்கும் பாறைகளை வாங்கி, அதை சேலத்தில் உள்ள தொழிற்சாலையில் தூளாக நொருக்கி உள்ளனர். அதன் மூலம் கிடைத்த மண் நிலவில் இருக்கும் மணலைப் போலவே இருந்துள்ளது. பின் அதை வைத்து வைத்து ஆராய்ச்சியை, சோதனையை செய்து பார்த்து இருக்கிறார்கள். இதில் செய்யப்பட சோதனையின் அடிப்படையில் தான் தற்போது சந்திரயான் 3 விண்ணில் ஏவப்பட்டு, நிலவில் இறங்க உள்ளது. இதற்காக அந்த இரண்டு கிராம மக்கள் ஒரு ரூபாய் கூட வாங்கவில்லை. சந்திரயான் 3 இற்கு உதவி செய்வதே பெரிய மகிழ்ச்சி என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் 10ஆண்டு நிறைவை முன்னிட்டு முக்கோண சுற்றுப் போட்டி

காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட அமரர் திரு, திருமதி அருளானந்தம் ஞாபகார்த்த கிண்ண முக்கோண சுற்றுப் போட்டியில் கிழக்கு பல்கலைக்கழக ஹொக்கி அணிகள் பங்கேற்றன. இந்நிகழ்வு காரைதீவு விபுலானந்த மைதானத்தில் கழகத்தின் தலைவர் தவராசா லவன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக ஆண், பெண் ஹொக்கி அணியினரும், காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணியினரும் மூன்று போட்டிகளில் மோதினர்.

முதல் இரண்டு இரண்டு போட்டிகளில் காரைதீவு அணி வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டியில் கிழக்கு பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றது.







பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து சிறப்பித்தார். ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் வளர்ச்சி அதன் ஸ்தாபக தலைவர் த.லவனின் அதீதமான அயராத முயற்சி மற்றும் அதன் சாதனைகள் பற்றி சிறப்புரையாற்றினார்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச சபை செயலாளர் ஏ. சுந்தரகுமார், முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர் அ. மகேந்திரராஜா, அஸ்கோ அமைப்பின் தலைவர் ஏ. விவேகானந்தராஜா, செயலாளர் ச. நந்தகுமார், பொருளாளர் அ.சுந்தரராஜன், இணைப்பாளர் ரி.புவனேந்திரராஜா, ஆசிரியர் எஸ்.பாஸ்கரன், விளையாட்டு உத்தியோகத்தர் வி.பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

கிழக்குப் பல்கலைக்கழக ஹொக்கி பயிற்றுவிப்பாளர் எஸ்.கிருஸ்ணபிரபு விசேட அதிதியாக கலந்து கொண்டார். வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன. சிறப்பு வீரர்களுக்கும் கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

காரைதீவு குறூப் நிருபர்...✍

# உலகின் மிகப்பெரிய பொருளாதார, ஜனநாயக நாடாக உயரும் இந்தியா




உலகின் மிகப்பெரிய பொருளாதார மற்றும் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா நிலைநிறுத்தப்பட்டு, பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் வளர்ச்சி அரங்கில் புதிய உயரங்களை எட்டி வருகிறது. அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கூட இந்தியாவின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொண்டு புதிய உலக ஒழுங்கை உருவாக்கியுள்ளன.

'உலகின் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக விரைவில் இந்தியா உயரும்' என்று சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு ஆட்சிக்கு வந்து ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்த ஒன்பது வருட காலத்தில் இந்தியா பலதுறைகளிலும் வளர்ச்சிப் பாதையில் முன்னேற்றமடைந்துள்ளது. எனவேதான் உலக பொருளாதாரத்தில் ஐந்தாவது இடத்தை எட்டிப் பிடிக்க இந்தியாவினால் முடிந்தது.

சிறந்த தலைமைத்துவம் மற்றும் நிர்வாகம், அனைத்துத்துறைகளிலும் வளர்ச்சி ஆகிய காரணங்களால் உலக நாடுகள் இந்தியாவை வியப்புடன் உற்றுநோக்குகின்றன. சுதந்திரத்தின் பின்னர் முன்னெப்போதும் இல்லாத வகையில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியின் கீழ் இந்தியா வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த 9 ஆண்டுகளில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றங்கள் ஏராளம் என்றுதான் கூற வேண்டும்.

சர்வதேச எல்லையைப் பாதுகாக்க 13,125 கி.மீ. தூரத்துக்கு வீதி அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2014 முதல் 2022 வரையில் உட்கட்டமைப்புத் திட்டங்களுக்காக ரூபா 18 இலட்சம் கோடி செலவிடப்பட்டுள்ளது. கடந்த 9 ஆண்டில் புதிதாக 74 விமான நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பொருளாதார நிலைமை வலிமையாக உள்ளது. ரஷ்யா_ உக்ரைன் போர், கொரோனா வைரஸ் தாக்கம் உள்ளிட்ட பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி) சீராக உள்ளது. வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் பணவீக்கம் குறைவாக உள்ளது.

இந்தியாவுக்கு அடுத்த 25 ஆண்டுகள் மாற்றத்திற்கான ஆண்டுகளாக இருக்கப் போகின்றன. இந்தியா மிகப்பெரிய பொருளாதார உயரத்தை அடைய இருக்கிறது என்று பொருளாதார நிபுணர்கள் எதிர்வு கூறுகின்றனர். இளைஞர்களை அதிகம் கொண்ட, முதிர்ந்த ஜனநாயகம் உள்ள நாடாக இந்தியா உள்ளதால் இது சாத்தியம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

தொழில்நுட்பத்தின் சக்தியைக் கொண்டிருக்கும் நாடாகவும் இந்தியா உள்ளது. பின்னடைவை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் உலகம் இருக்கும் நிலையில், அதன் வெளிச்சப் புள்ளியாக இந்தியா திகழ்கிறது.



## அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொண்டு புதிய உலக ஒழுங்கை உருவாக்கியுள்ளன

பற்றாக்குறை, வறுமை ஆகியவற்றில் இருந்து அனைவரையும் மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டு இந்தியா முன்னேறிச் செல்கிறது. எளிதான வாழ்க்கை, தரமான வாழ்க்கை போன்றன

140 கோடி மக்களுக்கும் கிடைக்கும் வகையில் நாட்டின் முன்னேற்றம் உள்ளது.




உலகளவில் நிகழும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளில் 40 சதவீதம் இந்தியாவில் நடக்கின்றன. பருவ நிலை மாற்றம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. ஜனநாயகம் வலிமையாகி உள்ளது. பசுமையான எதிர்காலத்துக்காக இந்தியா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நாட்டின் முன்னேற்றத்துக்கான வலுவான தூண்களில் ஒன்றாக ஜனநாயகம் விளங்குகிறது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நம்பிக்கை தருவதாக இருப்பதால் சர்வதேச முதலீட்டு நிறுவனங்கள் மிக ஆர்வமாக இந்தியாவில் முதலீடு செய்ய ஆரம்பித்துள்ளன. அதைவிட இந்திய வெளியுறவுக் கொள்கையானது அன்பு, அமைதி மற்றும் உதவுவது என்று இருப்பதால் இந்தியா மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டு வருகிறது.

அவைஒருபுறமிருக்க, மத்திய கிழக்கு நாடுகளில் இந்தியாவின் செயற்பாடுகள்

## இந்தியாவில் முதலீடு செய்வதில் சர்வதேச முதலீட்டாளர்கள் அதிக ஆர்வம்

கடந்த 10 ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்திருக்கின்றன. ஒரு காலத்தில் மத்திய கிழக்கில் அமெரிக்கா கோலோச்சி வந்தது. ரஷ்யா, சீனா போன்ற நாடுகளால் கூட மத்திய கிழக்கில் ஆழமாகக் கால்ஊன்ற வாய்ப்பில்லை. ஆனால் அமெரிக்கா, ரஷ்யா, சீனாவை பின்தள்ளி இப்போது இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது.

ஐக்கிய அரபு அமீரகமும் சவூதி அரேபியாவும் இந்தியாவுடன் நட்புறவைப் பேணுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்ற ன. தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவது, பொருளாதார உறவை மேம்படுத்துவது ஆகியவற்றில் ஐக்கிய அரபு அமீரகமும் சவூதி அரேபியாவும் இந்தியாவோடு இணைந்து செயற்பட்டு வருகின்றன.

இது ஒருபுறமிருக்க, சர்வதேச அரங்கில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த இந்தியாவுடன் அமெரிக்கா கைகோர்த்து செயற்படுகிறது.

பிரபல சர்வதேச வங்கியொன்று அண்மையில் ஒரு ஆய்வை நடத்தியது. அதில், பெரும்பாலான சர்வதேச முதலீட்டாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்வதையே அதிகம் விரும்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அரங்கில் அந்நிய முதலீட்டை ஈர்ப்பதில் இந்தியா சாதனை படைத்து வருகிறது.

வலுவான ஜனநாயகம், இளைஞர் சக்தி, அரசியல் ஸ்திரத்தன்மை ஆகியவற்றால் இந்தியா அடுத்தடுத்து பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகிறது.

நிலையான அரசு, தீர்க்கமாக முடிவெடுக்கும் அரசு, நேர்மையான நோக்கத்துடன் செயல்படும் அரசு நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்கிறது. அந்த வகையில் கடந்த 2014 ஆம் ஆண்டு மத்தியில் பா.ஜ.க அரசு பதவியேற்றது முதல் 'சீர்திருத்தம், மாற்றம், செயல்திறன்' என்ற இலட்சியப் பாதையில் இந்தியா பயணம் செய்கிறது. நாட்டின் நலன் தொடர்பான விவகாரங்களில் விரைந்து முடிவு எடுக்கப்படுகிறது. இதன் காரணமாக கடந்த 8 ஆண்டுகளில் நாடு அபார வளர்ச்சி அடைந்துள்ளது.

மத்திய அரசின் 'சுயசார்பு இந்தியா' திட்டம் நாட்டின் வளர்ச்சியை முடுக்கி விட்டிருக்கிறது. ஒரு நாடு ஒரே வரி (ஜி.எஸ்.டி) திட்டம் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டிருக்கிறது. அந்நிய முதலீட்டை ஈர்ப்பதில் இருந்த தடைகள் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு, சுரங்கம், விண்வெளி உள்ளிட்ட முக்கிய துறைகள் தனியாருக்கு திறந்து விடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர் சட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு எளிமையாக்கப்பட்டு உள்ளன. எளிதாக தொழில் தொடங்க ஏதுவாக ஒற்றை சாளர நடைமுறை அமுல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நடைமுறை மூலம் இதுவரை சுமார் 50,000 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு இல்லாத பசுமை எரிசக்தி உற்பத்தியில் இந்தியா தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இதை கருத்தில் கொண்டு அண்மையில் தேசிய ஹைட்ரஜன் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்தியாவில் மட்டுமல்ல, சர்வதேச அளவிலும் ஹைட்ரஜன் எரிசக்திக்கு அதிக தேவை இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ். சாரங்கன்...✍

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கடற்கரை தூய்மைப் பணியில் DFCC வங்கி




கடல் மற்றும் கடலோர சுற்றுச்சூழல் கட்டமைப்புகளை பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தும் வங்கியின் முதன்மையான சுற்றுச்சூழல் நிலைபேற்றியல் முயற்சிகளில் ஒன்றான 'சமுத்திரத்திற்கு வாழ்வளிப்போம்' முயற்சியின் மேம்பாட்டுடன், உலக சுற்றுச்சூழல் தினத்தை DFCC வங்கி கொண்டாடியுள்ளது.

உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் உலக சமுத்திர தினம் 2023 ஆகியவற்றைக் கொண்டாடும் வகையில், இலங்கை கடற்படை மற்றும் Eco Spindles Private Limited ஆகியவற்றுடன் இணைந்து, உஸ்வெட்டகியாவ, பிரீத்திபுர கடற்கரையில் விரிவான கடற்கரை சுத்தமாக்கும் நிகழ்வை DFCC வங்கி ஏற்பாடு செய்தது. உலக சுற்றுச்சூழல் தினம் 2023 ஆனது, #BeatPlasticPollution என்ற கருப்பொருளுடன் ஒன்றியதாக, கடலில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளை குறைப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை வெற்றிகரமாக மேம்படுத்துவதற்கு வழிகோலும் வகையில் அமைந்துள்ளது. ஊழியர்கள், குடும்பத்தினர், வாடிக்கையாளர்கள் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த உள்ளூர்வாசிகள் பலர் கலந்துகொண்டனர்.

வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி திமால் பெரேரா வழிகாட்டுதலின் பிரகாரம், சுற்றுச்சூழல் தூணின் கீழ் முகாமைத்துவத் தூதுவர் முன்னெடுப்பு முயற்சிகளுக்கு அமைவாக, சுற்றுச்சூழல் நேய வணிக கட்டமைப்பு, சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வள செயல்திறனை உறுதி செய்வதற்கான முயற்சிகளை உள்ளடக்கிய ஒரு விரிவான அணுகுமுறையை வங்கி செயல்படுத்தியுள்ளது.

இந்த முயற்சிகளுக்கு மேலதிகமாக, தனது Rise & Shine நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வீட்டுத்தோட்டத்தில் பங்குபெற தனது ஊழியர்களை DFCC வங்கி ஊக்குவிக்கிறது. கழிவு முகாமைத்துவத்திற்கான அதன் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, பொறுப்புணர்வுடனான கழிவு முகாமைத்துவத்தை ஊக்குவிப்பதன் மூலம் அதன் சுற்றுச்சூழல் அடிச்சுவட்டைக் குறைக்கும் நோக்கில், காகிதக் கழிவுகளை திறம்பட நிர்வகிக்க, குறைக்க, மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி (3R) கோட்பாடுகளை கடைப்பிடிக்கிறது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தொழில் ...

நம்பிக்கை நிதியம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் சேவைகளை ஒரே இடத்தில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இதற்கமைய, தொழில் திணைக்களத்தால் ஊழியர் சேமலாப நிதி தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதுடன், EPF பதிவுகளை பரிசீலித்தல், EPF தொடர்பாக பதிவு செய்யாத உறுப்பினர்களை பதிவு செய்தல், விரல் அடையாளங்களை பதிவு செய்தல், பெயர் மற்றும் பதிவுகளில் தவறுகள் காணப்படின் திருத்தம் செய்தல், ஆலோசனை சேவைகள், EPF தொடர்பான தகவல்களை பரிசீலித்தல் போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளன.

## MOB உரமூடைகளின் விலை...

ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

எனவே, இன்று முதல் புதிய விலையில் கமநல சேவை நிலையங்களிலிருந்து MOB உரத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு விவசாயிகளுக்கு கிடைக்குமெனவும், அவர் தெரிவித்தார்.

இந்தாண்டு தொடக்கத்தில் 22,000 ரூபாய்க்கு மேல் விற்கப்பட்ட MOB உரத்தின் விலை 19,500 ரூபாயாக குறைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து உரத்தின் விலையை மேலும் 4,500 ரூபாயால் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பிராந்தியத்தில் சிறந்த உயர் கல்வி...

கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

சர்வதேச தரத்துக்கு பல்கலைக்கழகங்களை தரமுயர்த்த வேண்டுமென்பதுடன், 2030ஆம் ஆண்டளவில் பிராந்தியத்தில் சிறந்த பல்கலைக்கழகங்களாக இலங்கை பல்கலைக்கழகங்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதற்கான கல்வி மறுசீரமைப்பு, கொள்கை உருவாக்கம் தொடர்பாக பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச பல்கலைக்கழகங்கள் சிலவற்றை இலங்கையில் திறப்பதற்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் முதற்கட்டமாக இவற்றில் இரண்டு அல்லது மூன்று பல்கலைக்கழகங்களை திறக்க எதிர்பார்த்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பிராந்தியத்தில் சிறந்த உயர் கல்வியை வழங்கும் மையமாக இலங்கையை மாற்ற வேண்டுமென்றும் இதன் மூலம் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களிலுள்ள மாணவர்களை இலங்கைக்கு ஈர்க்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன்,

"இலங்கையில் உயர் கல்வி மறுசீரமைப்பு மற்றும் இதற்கான கொள்கை உருவாக்கம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. 17 அரச பல்கலைக்கழங்கள் இருக்கின்றன. 102 வருடம் பழமையான கொழும்பு பல்கலைக்கழகமும் 3 வருடங்களேயான வவுனியா பல்கலைக்கழகமும் இவற்றுள் அடங்கும். பட்ஜட்டில் உயர் கல்விக்கு 75 பில்லியன் ரூபாய் உட்பட 250 பில்லியன் ரூபாய் கல்விக்காக மட்டும் ஒதுக்கப்படுகிறது. இந்தப் பல்கலைக்கழங்களை சர்வதேச தரத்துக்கு உயர்த்த வேண்டியுள்ளது. குறைந்தபட்சம் 2030ஆம் ஆண்டில் பிராந்தியத்தில் சிறந்த பல்கலைக்கழங்களாக தரமுயர்த்த வேண்டும். பிராந்தியத்தில் சிறந்த கல்வி மையமாக இலங்கையை உருவாக்குவதற்கான திட்டம் இருக்கிறது. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரா, தெலுங்கான ஆகிய மாநிலங்களிலுள்ள மாணவர்கள் டெல்லிக்குச் செல்வதை விட, இலங்கையில் உயர் கல்வியை மேற்கொள்வது இலகுவாக இருக்கும். கல்வி, கலாசாரம் அனைத்தும் ஒன்றாகவே இருக்கிறது. இந்த மாநிலங்களில் 2030ஆம் ஆண்டு 3.5 பில்லியன் சனத்தொகை இருக்கும். அங்கு பொருளாதாரம் வளர்ந்து வருகிறது. இந்தச் சந்தையை இலக்கு வைத்துள்ளோம். அங்குள்ள மாணவர்களை ஈர்க்கும் வகையில் உயர் கல்வித்துறையை மேம்படுத்த வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

## டெய்லி நியூஸ் துணை ஆசிரியர் ...

நேற்று (14) அதிகாலை காலமானார். அவரது பூதவுடல் இன்று (15) காலை 9.00 மணிக்கு களுபோவிலவிலுள்ள பீரிஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கொஹுவலை மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

தனது இனிய சுபாவத்தால் டெய்லி நியூஸ் பத்திரிகையில் மாத்திரமல்ல, அதற்கு அப்பாலும் அனைவராலும் விரும்பப்பட்ட கெரி கார்னியரின் திடீர் மறைவு பத்திரிகைத்துறையில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது .

தனது மாமாவான விளையாட்டுத்துறை பத்திரிகையாளர் ஜெம் கார்னியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி கெரி கார்னியர், பத்திரிகைத்துறைக்கு வந்தார். குடும்பத்தில் ஏற்பட்ட இழப்புகளை தவிர, ஒரு நாளேனும் வேறு எதற்காகவும் அலுவலகத்தில் விடுமுறை எடுக்காதவரென்று அவரது நண்பர்கள் எப்போதும் அவரைப் பற்றி பெருமையாக கூறுவார்கள். அது மாத்திரமல்ல, அநேக சந்தர்ப்பங்களில் இரவு நேரங்களில் அவர் தன்னந்தனியே டெய்லி நியூஸ் பத்திரிகையை கையாள்வார். நேற்று முன்தினம் இரவும் வெகு நேரம்வரை பத்திரிகைப் பணியில் ஈடுபட்டு விட்டே, வீடு திரும்பியிருக்கின்றார். கொவிட் 19 தொற்றுநோயின் உச்சக்கட்டத்தில் கூட அலுவலகத்துக்கு வந்து வேலை செய்ய முன்வந்த சில ஊழியர்களில் இவரும் ஒருவர். எந்நேரமும் தனது தொழிலை நேசித்தமையால், தனது உடல் ஆரோக்கியத்தைக் கூட கவனிக்க அவருக்கு நேரமிருக்கவில்லை.

கொழும்பு புனித பீற்றர்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான அவர், 1995 இல் 'தி ஐலண்ட்' பத்திரிகையிலிருந்து லேக் ஹவுஸில் இணைந்தார். சில காலங்களிலேயே டெய்லி நியூஸ் பத்திரிகையில் நட்சத்திர பத்திரிகையாளராகவும் மற்றும் துணை ஆசிரியராகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். கெரி கார்னியரின் ஆங்கில மொழிப் புலமை, மிகவும் மந்தமான செய்திகளைக் கூட சுவாரஸ்யமானதாக மாற்றி வாசகர்களின் கவனத்தைக் கவர்ந்து விடும்.

மேற்கத்தேய இசையில் அவர் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியமாக விளங்கினார், எந்தப் பாடலானாலும் வெளியிடப்பட்ட சரியான ஆண்டு, திகதி மற்றும் சம்பந்தப்பட்ட கலைஞர்களின் பிறந்தநாள் என்பனவற்றை பிழையின்றி தருவார் . அவர் ஒரு சிறந்த விளையாட்டுப் பிரியரும் ஆவார்.

காலக்கெடுக்களின் பதற்றத்திலிருந்து சிறிதேனும் நிவாரணம் பெற விரும்பும் போதெல்லாம் சக பத்திகையாளர்கள் அவரை தேடி வந்தனர். அவர் தனது சகாக்களுக்கு எப்போதும் உதவிக்கரமாக இருந்தார். பல புதிய பத்திரிகையாளர்களை வழி நடத்தினார். அது அவர்களை பத்திகைத்துறையில் வெகு தூரம் அழைத்துச் சென்றிருக்கிறது.

பறங்கியர் என்றாலும், கெரி கார்னியர் சரளமாக சிங்கள மொழியில் உரையாடும் வல்லமை படைத்தவர். எளிமைக்காகவே அவர் பெரிதும் விரும்பப்பட்டார்.

தனது கணவருடன் இணைந்து டெய்லி நியூஸுக்கு சேவை செய்த கெரி கார்னியரின் துணைவியார் அஞ்சலிக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

தினகரன் பிரதம ஆசிரியர் உட்பட தினகரன் ஊழியர்கள் அனைவரும், மறைந்த இனிமையான நண்பர் கெரி கார்னியரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்...

## அனைத்து துறைகளிலும் உரிய...

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று (14 ) நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போதே, அமைச்சர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச செயலாளரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில், பிரதேசத்தின் கடல் போக்குவரத்து சுற்றுலாத்துறை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. 'நாரா' நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்படாத பிரதேசங்களில் மீன்பிடித் தொழிலுக்காக பயன்படுத்தப்படுகின்ற உள்ளூர் இழுவைப் படகுகள் கைப்பற்றப்பட்டு, அப்படகுகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கடற்படை மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், உள்ளூர் இழுவைப் படகுகளால் பாதிப்பு ஏற்படுவதாக அப்பிரதேச கடற்றொழிலாளர்கள் முறையிட்டதையடுத்தே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'நாரா' எனப்படும் தேசிய நீரியல்வளங்கள் ஆராய்ச்சி மற்றும் முகவர் நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட சேற்றுநிலப் பகுதிகளில் மாத்திரம் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு உள்ளூர் இழுவைப் படகுகளுக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், நெடுந்தீவு கடல் பகுதியில் அடையாளப்படுத்தப்படாத பகுதிகளிலும் குறித்த உள்ளூர் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் தமது கடல் வளங்களை அழிப்பதாக நேற்று குற்றஞ்சாட்டப்பட்டது.

மேலும், நெடுந்தீவு மக்களுக்கு 24 மணித்தியாலங்களும் மின்சாரம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மின்பிறப்பாக்கிகள் சுழற்சி முறையில் மாற்றப்படுகின்ற போது நேர ஒழுங்கு பின்பற்றப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

அதேபோன்று எரிபொருட்களின் விலை, நாடளாவிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகபட்சம் 20 ரூபாய் அதிமாக மாத்திரமே விற்பனை செய்ய முடியுமென்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எரிபொருள் விற்பனை தொடர்பாக மேற்பார்வை செய்யுமாறு பிரதேச செயலாளரை கேட்டுக்கொண்டார்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களை விட, சுமார் 45 ரூபாய்வரை விலை அதிகரித்து நெடுந்தீவில் எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாக பிரதேச மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டதையடுத்தே, அமைச்சரால் மேற்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், நெடுந்தீவில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுகின்ற போது, உரிய சட்ட நியமங்கள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பிரதேச சபை மற்றும் மிருக வைத்திய அதிகாரி போன்ற எவற்றின் அனுமதிகளும் பெறப்படாமல், தான்தோன்றித்தனமாக மாடுகள் வெட்டப்படுவதாக பிரதேச அமைப்புகளின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்ட நிலையிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மத்திய மற்றும் மாகாண அமைச்சுகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள், அவற்றின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

மேலும், துறை ரீதியான முன்னேற்ற மீளாய்வில் சேவைத்துறை சார்ந்த முன்னேற்றங்கள், அவற்றின் தீர்வுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

குறிப்பாக சுகாதாரம், கல்வி, வீட்டுத் திட்டம், உள்ளூராட்சி, கூட்டுறவு, நீர்வழங்கல், மின்சாரம், போக்குவரத்து, சமுர்த்தி, விவசாயம், நீர்ப்பாசனம், வாழ்வாதாரம், மீன்பிடி, வீதிப் புனரமைப்பு, காணி உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளெனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார வளர்ச்சியை அடைய ...

இலங்கையை அதிக போட்டித்தன்மை கொண்ட பொருளாதார முறைக்கு கொண்டு செல்வது தனது எதிர்பார்ப்பெனத் தெரிவித்த ஜனாதிபதி, பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தினூடாக வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமெனவும் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற இந்திய வர்த்தகர்களுடனான விசேட சந்திப்பின் போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, இந்திய வர்த்தக சமூகத்தால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப்பரிசு வழங்கி வைக்கப்பட்டதுடன், வர்த்தக சமூகத்தினருடன் ஜனாதிபதி புகைப்படமொன்றையும் எடுத்துக்கொண்டார்.

பொருளாதார சுபீட்சத்துக்கான பாதையில் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை தொடர இலங்கை எதிர்பார்க்கிறது. இந்திய பொருளாதாரத்தை முன்னேற்ற பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்டு வரும் நிதிக்கொள்கை, இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுமெனவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான வர்த்தக உறவுகள் சுமார் 700 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமானது. கேரளாவிலிருந்து இலங்கைக்கு வியாபாரம் செய்ய வந்த வரலாறு நமக்கு உண்டு. நவகமுவிலுள்ள பத்தினி ஆலயம், கேரளா மக்கள் இந்நாட்டுக்கு வந்து வர்த்தகம் செய்யும் போது கட்டப்பட்டதாகவும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது ஆசியப் பிராந்தியத்தில் பலம் வாய்ந்த நாடாக இந்தியா தனது அதிகாரத்தை நிலை நாட்டியுள்ளது. ஆனாலும், மேற்கு ஆசிய நாடுகளும் பலமாக மாறியிருப்பதும் சிறப்பு வாய்ந்தது. இந்தியா போன்ற பலம் வாய்ந்த நாட்டுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் நன்மை பயக்கும். பிரதமர் மோடி மேற்கொண்ட நிதிக்கொள்கையால், பொருளாதாரத்தில் இந்தியா முன்னேற முடிந்தது. அந்த நிதிக்கொள்கைகள், இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்துக்கும் உதவக்கூடியதாக அமைந்துள்ளது.

நான் இலங்கையை மிகவும் போட்டி நிறைந்த பொருளாதாரத்துக்கு கொண்டு செல்லவே விரும்புகிறேன். பசுமைப் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மூலம் இலங்கையின் பொருளாதார நிலையை வலுவான நிலைக்கு உயர்த்த முடியும். அதற்கு சட்டவிதிகள் அவசியம். போட்டி, பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு தேவையான சட்டங்களை எதிர்காலத்தில் சீர்திருத்த எதிர்பார்க்கின்றோம்.

நமது பொருளாதாரத்தை வலுப்படுத்த, இந்தியாவுடன் நெருங்கிய உறவை வைத்திருக்க வேண்டும். இலங்கையின் பொருளாதார நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கு இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது. இரு நாடுகளுக்குமிடையில் புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, அதற்கான துறைகளை அவற்றில் ஈடுபடுத்த வேண்டும்.

இலங்கையில், இந்திய ரூபாயின் புழக்கம் தொடர்பாக இங்கு கூறப்பட்டது. இந்திய ரூபாய் மட்டுமல்ல, டொலரும் புழக்கத்தில் இருந்தால், அது இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக அமையும். இலங்கையில், இந்திய ரூபாய் புழக்கத்தில் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆய்வு செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம். ஒரு நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால், அது உலகுக்கு திறந்துவிடப்பட வேண்டும். அது தொடர்பான அவசர சட்ட சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படும்" எனத் தெரிவித்தார்.

## மக்களுக்கு மருந்துகளை தாமதமின்றி...

பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும்என்றும் சுட்டிக்காட்டினார்.

சுகாதாரத்துறை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (14) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை உடனடியாக தீர்க்கும் வகையில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபை சட்டத்தின் (NMRA) திருத்தம் தொடர்பான ஆலோசனைகளை உடனடியாக சமர்ப்பிக்குமாறும் இதன்போது ஜனாதிபதி, சுகாதார அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தற்போதுள்ள நடைமுறையின் கீழ் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் (FDA) அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளுக்கான இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் மறு அங்கீகார செயல்முறையை துரிதப்படுத்துமாறும் சுகாதார அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) மற்றும் ஐக்கிய இராச்சியம் (UK) ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் (NMRA) செயல்முறை மூலம் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக நேரடியாக கொள்வனவு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

2024ஆம் ஆண்டு இறுதிவரை வைத்தியர்கள் ஓய்வு பெறும் வயதை 63 வரை நீடிக்கவும், விசேட சந்தர்ப்பங்களில் சுகாதார அமைச்சின் தேவைகளுக்கு ஏற்ப அது குறித்து தேவையான தீர்மானங்களை எடுப்பதற்கும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உப குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுகாதார அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

தாதியர் ஆட்சேர்ப்பின் போது கலைப் பிரிவில் கல்வி கற்றாலும் தாதியர் பயிற்சியில் உள்வாங்கக் கூடிய வகையில் விதிமுறைகள் திருத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் தடுப்பூசிகளின் தரம் தொடர்பான சிக்கல்கள் மற்றும் சுகாதார சேவை நிறுவனங்களின் ஊழியர்களின் அலட்சியத்தால் இடம்பெற்றதாகக் கூறப்படும் அண்மைய சம்பவங்கள் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன், உரியநேரத்தில் பணம் செலுத்துவதை உறுதி செய்தல், வேறு நோக்கங்களுக்கு நிதியை பயன்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் மருத்துவ உபகரணங்கள்தொடர்பான நிலுவைத் தொகை மற்றும் சேவை ஒப்பந்தங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நிதி வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கு ஆவணங்களில் உரிய அதிகாரிகள் கையொப்பமிட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க திறைசேரியின் பிரதிநிதி உள்ளடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இலங்கை மருத்துவ சபையில் இதுவரை பதிவு செய்யப்படாத வைத்திய அதிகாரிகள் தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் உரிய விதிமுறைகளை மீளாய்வு செய்யுமாறும் ஜனாதிபதி, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். ஜே.எஸ். சந்திரகுப்த, திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆர்.எம்.பி.ரத்நாயக்க மற்றும் துறைசார் அரச நிறுவனங்களின் தலைவர்கள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன உள்ளிட்ட சுகாதாரத் துறையின் சிரேஷ்ட அதிகாரிகள் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## மத வெறுப்பை நிராகரிக்கும்...

ஆதரவாகவும் 12 பேர் எதிராகவும் 7 பேர் வாக்களிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு இணை ஆதரவு வழங்கிய போதும், இலங்கையால் வாக்களிக்க முடியவில்லையெனவும் விவாதத்தின் போது தீர்மானத்தின் சார்பாக தலையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தத் தீர்மானத்துக்கு ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட கூட்டு மேற்கத்தேய நாடுகள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன. குர்ஆன் எரிக்கப்பட்டதை கண்டிக்கும் அதேவேளை, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் (OIC) முன்முயற்சி மனித உரிமைகளுக்கு முன்னுரிமை அளிப்பதை விட மதச் சின்னங்களை பாதுகாப்பதை முதன்மையான நோக்கமாக கொண்டதென்று அவர்கள் வாதிட்டனர்.

## வெளிநாட்டு வேலைகளுக்கு...

யாழ்ப்பாணத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் அதிகளவான மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். வெளிநாடு செல்பவர்கள் சட்ட ரீதியாக செல்லாது, அங்கு சென்று பல இன்னல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்கின்றனர். இது தொடர்பாக நாம் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகிறோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி சட்டவிரோத நபர்கள், பண மோசடிகள் செய்கின்றனர். இவற்றை ஊடக செய்தியாக மட்டும் வெளியிடாமல், அமைச்சுக்கும் அது தொடர்பாக முறைப்பாடுகள் அளிக்கும் போதே நடவடிக்கை எடுக்க முடியும். அதனூடாகவே ஏனையவர்களையும் பாதிப்பிலிருந்து காப்பாற்ற முடியும்.

தென்மாகாணத்தில் இவ்வாறான மோசடிகள் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்கின்றனர். பாதிக்கப்பட்ட சம்பவங்கள், ஏமாற்றியவர்கள் தொடர்பாக பதிவுகளை வெளியிடுகின்றனர். ஆனால், வடமாகாணத்தில் அவ்வாறு செய்வது மிக குறைவு" என்றார்.

## கலாசூரி சிவகுருநாதன்...

ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிக்க, லேக் ஹவுஸ் நிறுவன ஆசிரியர் பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் தமிழ் வாழ்த்தை தொடர்ந்து வாழ்த்துரைகளை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் நடராஜா காண்டீபனும் 'ஞானம்' பிரதம ஆசிரியர் 'சாகித்யரத்னா' தி.ஞானசேகரனும் நிகழ்த்தவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, கவி வாழ்த்து நிகழ்வை சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளும் தகவல் அறியும் ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர் ஜனாப் ஏ.எம். நகியா, எழுத்தாளர் லெ.முருகபூபதி (அவுஸ்திரேலியா) வழங்கவுள்ளனர்.

நூல் அறிமுகவுரையை தில்லை நடராஜா (முன்னாள் மேலதிக செயலாளர் கல்வி அமைச்சு) வழங்கவுள்ளார். இதன் பின்னர், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இறுதியில் கே.பொன்னுத்துரையின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுறும். இந்நிகழ்வுகளை மேமன் கவி தொகுத்து வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு, கலாசூரி இ.சிவகுருநாதன் ஞாபகார்த்தக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

## திரிபோஷா உற்பத்தி...

50 வருடங்கள் வரலாற்றைக் கொண்ட திரி போஷா நிறுவனம், 1973 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2010ஆம் ஆண்டில் 'ஶ்ரீலங்கா திரிபோஷா லிமிட்டெட்' என பெயர் மாற்றப்பட்டு, அரச நிறுவனமாக நிறுவப்பட்டது.

ஜா எல, கப்புவத்த பிரதேசத்தில் 5 ஏக்கர் காணியில் நிறுவப்பட்ட இந்த நிறுவனம், இலாபம் ஈட்டி திறைசேரிக்கு வருடாந்தம் நிதி வழங்கும் நிறுவனமாக இருக்கிறதெனவும், அவர் தெரிவித்தார்.

மாதத்துக்கு தேவையான திரிபோஷாவை தயாரிப்பதற்கு 15 மெற்றிக்தொன் சோளம் தேவைப்படும்.

அதனை உள்ளூர் சோள உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள இயலாமையால், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தேசிய ரீதியில் பெரும்பாலும் சோளம் உற்பத்தி செய்யப்பட்டாலும், அவர்களுக்கு தேவையான அறுவடை, தொழில்நுட்ப அறிவு இல்லை.

இதனால், விளைச்சலை சரியான தரத்துடன் சந்தைக்கு வழங்க முடியவில்லையெனவும், அவர் தெரிவித்தார்.

## சிறுபான்மையினர் பிரச்சினை...

கோரிக்கைகள் தொடர்பாக விரிவாக பேசப்பட்டதாக அமெரிக்கத் தூதுவர் தனது டுவிட்டர் தளத்தினூடாக தெரிவித்துள்ளார்.

## மலையகத்தில் ஆசிரியர், தாதியர் ....

கோபால் பாக்லேயுடன் 'மலையகம் 200' நினைவுறுத்தல் நிகழ்வுகள் தொடர்பாக தாம் கலந்துரையாடி எழுத்து மூலம் கோரிக்கை விடுத்ததாகவும், அவர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக இலங்கை வந்து சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடனும் கலந்துரையாடியதாகவும் தெரிவித்த அவர், அடுத்த வாரம் இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நல்லெண்ண உத்தரவாதங்கள் அளிப்பாரென்று தாம் நம்புவதாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக மனோ கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்த போது,

"கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பாக இந்திய மத்திய அரசாங்கத்தை நாம் நம்பியுள்ளோம். குறிப்பாக, நாடெங்கும் பரந்து வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களுடைய பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை. இந்த பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களை பயிற்றுவிக்க விசேட வேலைத்திட்டம் தேவை. அதேபோல் தேயிலை, இறப்பர் மலைகளில் அல்லலுறும் எங்கள் பெண்களின் வெளிநாட்டு, உள்நாட்டு வேலைவாய்ப்புகளை உறுதிப்படுத்த தாதியர் பயிற்சிக் கல்லூரி அவசியம். உயர் கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வியை அடிப்படையாகக் கொண்டு ஒரு முதற்கட்ட பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவை அனைத்தும் இந்திய வம்சாவளி மலையக தமிழர்களுக்கான விசேட சமூக அபிவிருத்தி திட்டங்களாக முன்னெடுக்கப்பட வேண்டும். மத்திய, மேல், சப்ரகமுவா, ஊவா, தென் மாகாணங்களில் வாழும் எமது மக்கள் தொடர்பாக தமக்குள்ள தார்மீக கடப்பாட்டை இந்திய மத்திய அரசாங்கம் நிறைவேற்றுமென்று நாம் நம்புகிறோம் என்றார்.

## டென்மார்க் பெண் ...

பொலிஸாரால் நேற்று (14) கண்டுபிடிக்கப்பட்டது. பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் நேற்று முன்தினம் (13) முதல் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே, அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். இப்பெண் மலையேற்றத்தின் போது தவறி வீழ்ந்திருக்கலாமென்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## சுவிஸ் தூதரக அதிகாரிக்கு...

ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பண்டார பலல்லே விதித்துள்ளார்.

## நீதிமன்றத்தை அவமதிக்கும்...

விமர்சிக்கும் வகையில் பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி சரத் வீரசேகர எம்.பி. கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், அவரது கருத்து நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாக கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருந்தது. அதற்கு பதிலளிக்கும் வகையில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் வீரசேகர, சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்த குற்றச்சாட்டை வன்மையாக நிராகரிப்பதாக, அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் நடிகர் ரஜனிகாந்த்...

நடிகர் ரஜனிகாந்தின் நேற்றைய விஜயத்தின் போது, எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஶ்ரீலங்கன் விமான சேவை தங்களது உத்தியோகபூர்வ முகநூலில் பதிவேற்றியுள்ளது.

தற்போது சமூக வலைத்தளங்களில் இப்புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

## பிரமிட் திட்டம் மூலம்... *03ஆம் பக்கத் தொடர்*

*நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இந்த நிறுவனம் மீது விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.*

*இந்நிலையில், நிறுவனத்தால் ஏமாற்றப்பட்ட மொத்த தொகை இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றாலும், இடைநிறுத்தப்பட்ட கணக்குகளில் கிடைத்த பணத்தை விட குறைந்தது இருபது மடங்கு அதிகமாக இருக்கலாமென்று விசாரணை அதிகாரிகள் நம்புவதாகவும் இருப்பினும், பிரமிட் திட்டத்துக்கு எதிராக இதுவரை பொதுமக்களிடமிருந்து எதுவித முறைபாடுகளும் கிடைக்கவில்லையென, பொலிஸார் தெரிவித்தனர்.*

# கிழக்கின் குரல்



## கல்முனையில் 108 டெங்கு நோயாளர்கள் உயிரிழப்பின்றி காப்பாற்றப்பட்டுள்ளனர்

காரைதீவு குறூப் நிருபர்




கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த ஆறு மாதங்களில் அனுமதிக்கப்பட்ட 108 டெங்கு நோயாளிகளும் எவ்வித உயிரிழப்புமின்றி காப்பாற்றப்பட்டு வீடு திரும்பியுள்ளனர்.

குறித்த வைத்தியசாலையில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரனின் சிறந்த நிருவாகத்தின் கீழ் நோயாளர்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வீடுகளுக்கு அனுபப்படுவது அனைவரும் அறிந்ததே.

அந்த வகையில் கடந்த ஆறு மாத காலத்தில் வைத்தியசாலைக்கு வருகை தந்த பல்வேறு தொற்று நோயாளர்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயாளர்கள் (Dengue) 108 , எலிக்காய்ச்சல் நோயாளர்கள் (leptospirosis) 04, வயிற்றுப் போக்கு நோயாளர்கள் (Dysentert) 10, மூளைக்காய்ச்சல் நோயாளர்கள் (Meningitis) 03, சின்னம்மை நோயாளர்கள் (Measles)05, கொப்பளிப்பான் நோயாளர்கள் (Chicken pox) 13, காச நோய் நோயாளர்கள் (Tuberculosis) 15 பேருக்கும் சிறந்த முறையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு குணமடைந்து வீடு சென்றுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எந்த ஒரு டெங்கு நோயாளர்களுக்கும் உயிராபத்துக்கள் ஏற்படாமல் பராமரிப்புகள் வழங்கப்பட்டு குணமடைந்து வீடு சென்றமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும் என்று தொற்று கட்டுப்பாட்டு பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

## கிழக்கு ஆளுநர் செந்தில் - அலி ஸாஹிர் மௌலானா சந்திப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



கிழக்கின் புதிய ஆளுநராக பொறுப்பேற்றுள்ள செந்தில் தொண்டமானுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான அலி ஸாஹிர் மௌலானாவுக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு நேற்று முன்தினம் காலை திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது புதிய ஆளுநருக்கு தமது வாழ்த்துக்களை பகிர்ந்தது டன், தன்னுடனான நீண்டகால நட்பினையும் , கிழக்கிலே மாகாண சபை பிரதிநிதிகளை கொண்ட சபை இயக்கத்தில் இல்லாத தருணத்தில் அதில் அனுபவத்தை கொண்ட சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த ஒருவர் கிழக்கின் ஆளுநராக கிடைத்துள்ளமைக்காக தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதுடன் , புதிய ஆளுநராக பொறுப்பேற்றுக் கொண்ட பிற்பாடு கிழக்கிலே மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு தமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் மக்கள் சார்பிலே தெரிவித்ததுடன்,

பல்வேறு மக்கள் சார் விடயங்கள், மாகாண நிருவாக செயற்பாட்டிலே நீண்டகாலமாக கிடப்பிலே உள்ள சில விடயங்கள் குறித்தும் ஆளுநரின் கவனத்திற்கு அலி ஸாஹிர் மௌலானா கொண்டு வந்ததையடுத்து உடனடியாக அவ்விடத்திற்கு செயலாளர்கள், விடயத்திற்கு பொறுப்பான அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடியதுடன் தீர்வுகளையும், துரிதமாக அடுத்த கட்ட நகர்வுகளையும் முன்னெடுக்குமாறு பணிப்புரையும் கிழக்கின் ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களால் விடுக்கப்பட்டதுடன், அனைவரையும் அனுசரித்து பேதங்கள் அற்ற முறையில் தனது பதவிக் காலத்தினுள் கிழக்கிலே வினைத்திறன் மிக்க பணியாற்ற திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் இங்கு குறிப்பிட்டார்.

கோட்ட மட்ட தமிழ்மொழித்தின போட்டி;

## பட்டிருப்பு தேசிய பாடசாலைக்கு 11 முதலிடங்கள்



மாளிகைக்காடு குறூப் நிருபர்

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிகுடி 2023 தமிழ் மொழித்தின கோட்டமட்ட போட்டிகளின் முடிவுகளின் படி பதினொரு முதலாம் இடங்களையும் எட்டு இரண்டாம் இடங்களையும் இரண்டு மூன்றாம் இடங்களையும் பெற்று வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் எம்.சபேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது .

## வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கையளிப்பு



அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவில் வருமானம் குறைந்த குடும்பத்தவர்களுக்கு சமுர்த்தி சௌபாக்கியா வீடமைப்புத்திட்டத்தின் மூலம் புதிய வீடுகளை நிர்மாணித்து கையளிக்கும் நிகழ்வு (11) தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி. அன்வர் ஏற்பாட்டில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் தலைமையில் நிந்தவூர் 23 ஆம் பிரிவில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீடுகளை பயனாளிகளிடம் சம்பிரதாய பூர்வமாக கையளித்தார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி மூலம் நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள தெரிவு செய்யப்பட்ட மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று புதிய வீடுகள் இதன்போது பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியினைக் கொண்டும் பயனாளிகளின் பங்களிப்பினைக் கொண்டும் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கந்தளாயில் புதிய நீர்ப்பாசன வடிகால் திட்டம் ஆரம்பம்



கிண்ணியா மத்திய நிருபர்

கந்தளாய், வாத்தியக்காம வயல் நிலங்களுக்கு சீராக நீர்ப்பாசன வசதியை பெற்றுக் கொடுக்கும் முகமாக, புதிய நீர்ப்பாசன வடிக்கால் அமைப்பு புனர்நிர்மாணப் பணிகள் நேற்று முன்தினம் (13) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

3.9 மில்லியன் ரூபா செலவில், ஒருங்கிணைந்த நீர் நிலை மற்றும் நீர்வள அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நீர்ப்பாசன அமைச்சினால், இந்த வேலை திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் ஐந்து விவசாய கிராமங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 370 ஏக்கர் விவசாய நிலங்கள் சீரான நீர்ப்பாசன வசதியை பெற உள்ளன.

இந்த வைபவத்தில், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரல்ல, திருகோணமலை மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ் மொழியை யாரும் உதாசீனம் செய்ய முடியாது

### இலங்கை அரசியல் யாப்பின் மொழி உரிமை சட்டம்

காரைதீவு குறூப் நிருபர்



இலங்கை அரசியல் யாப்பில் மொழி உரிமை பற்றி நான்காம் அத்தியாயத்தில் விரிவாக கூறப்பட்டிருக்கிறது. அதன்படி இலங்கையின் எந்த மூலைமுடுக்கிலும் தமிழ் மொழியை யாரும் உதாசீனம் செய்ய முடியாது.

இவ்வாறு கல்முனையில் நடைபெற்ற சமூக உரிமைப்பாடு இரண்டாம் மொழி கல்வியின் முக்கியத்துவம் மொழிக் கொள்கை பற்றிய இறுதி நிகழ்வில் உரையாற்றிய இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.எம்.அசீஸ் தெரிவித்தார்

மனித அபிவிருத்தித் தாபனம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக கனடா அரசின் அனுமதியுடன் ஐந்து வருட வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வரும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக சகவாழ்வு சங்கங்கள் ஊடாக ஒன்றிணைந்த கலாசார நிகழ்வையும் கருத்துக்களத்தையும் நேற்று முன்தினம்(13) வியாழக்கிழமை மாலை கல்முனையில் ஏற்பாடு செய்திருந்தது.

அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அங்கு மேலும் உரையாற்றிய அசிஸ்,

வடக்கு கிழக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழிலேயே முறைப்பாடு செய்ய உரிமை உண்டு. ஏனென்றால் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூன்றாவது அத்தியாயத்தின் 14வது உறுப்பின் படி அது தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோல வடக்கு கிழக்கில் நிர்வாகமொழி கல்வி மொழி தமிழ்மொழி என்பதையும் நாங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். எனவே இலங்கை யாப்பின் நான்காவது உறுப்பில் மொழி உரிமை கூறப்படுகிறது. அந்த உரிமை முழுமையாக பேணப்பட்டால் நாட்டில் சமத்துவம் சமாதானம் நல்லிணக்கம் தானாக உருவாகும்.தனிமனித சுதந்திரம் பேணப்படுகின்ற பொழுது மொழி உரிமை தானாகவே பேணப்படும்.

மொழி உரிமை மீறப்படுகின்ற பட்சத்தில் உரிய இடத்தில் முறைப்பாடு செய்து அதற்கான பரிகாரத்தை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

## மண்முனை வடக்கு காணிப் பிணக்கு தீர்வுக்கான நடமாடும் சேவை

மட்டக்களப்பு விஷேட நிருபர்



மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அரச காணிகளில் காணப்படும் தீர்க்கப்படாத காணிப் பிணக்குகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (13)காணி தொடர்பான நடமாடும் சேவை நடைபெற்றது.

இந் நடமாடும் சேவையானது மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கமைவாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண காணி ஆணையாளர் டி.எம்.ஆர்.சி.தசநாயக்கவின் பங்கு பற்றுதலுடன் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 48 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பெருமளவான மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இதன் போது காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணிகள், அரச குத்தகை காணிகள் போன்ற காணிப் பிணக்குகளுக்கு இதன் போது அதிகாரிகளினால் தீர்வுகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், மாவட்ட காணி அலுவலக உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர், மண்முனை வடக்கு நிருவாக உத்தியோகத்தர் (கிராம உத்தியோகத்தர்) மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## ஜேர்மன் உல்லாசப் பிரயாணியின் தொலைபேசி, பணம் திருட்டு

மாளிகைக்காடு குறூப் நிருபர்

அறுகம்பை கடலில் நீர்ச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஜேர்மன் நாட்டவர் ஒருவரின் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசியும் கைப்பையிலிருந்த பணமும் திருடப்பட்டுள்ளதாக பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொத்துவில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக ஒலுவில், பாலமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 22 மற்றும் 32 வயதுடைய இருவர் கடந்த புதன்கிழமை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பொத்துவில் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கிணங்க எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பொத்துவில் நீதிமன்ற நீதவான் ஐ.என்.ரிஸ்வான் உத்தரவிட்டார்.





கிழக்கு மாகாணத்தில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களில் நடமாடும் சமூக சேவைகளும் விஷேட மருத்துவ முகாம்களும் நடைபெற்று வருகின்றன. இவ்வேலைத் திட்டத்திற்கு அமைவாக, பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள செங்காமம் கிராமத்தில் குறித்த சமூக சேவை நிகழ்வும் விஷேட மருத்துவ முகாமும் நடைபெற்ற போது,..

படம்: அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

## வடக்கின் உதயம்

# 10 வயது மகளை 02 வருடங்களாக துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு

## 17 வருடங்கள் கடூழிய சிறை

மகளை இரண்டு வருடங்களாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய தந்தைக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றம் 17 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.ஏ. சஹப்தீன் இவ்வாறு கடூழிய சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு தனது 10 வயது மகளை இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக சந்தேக நபரின் மனைவி அளித்த முறைப்பாட்டுக்கமைய வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வழக்கின் அனைத்து சாட்சியங்களுக்கும் சந்தேக நபர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து அவருக்கு கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

# விரைவில் வடக்கில் தொழிற்பயிற்சி நிலையமொன்று நிறுவப்படும்

(யாழ். விசேட நிருபர்)

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வோருக்கான வடக்கு மாகாணத்திற்கான தொழிற்பயிற்சி நிலையம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவப்படவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்விடயத்தை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவப்படவுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வோருக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைவதற்கான காணியை பெற்றுத்தருமாறு தான் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரை சந்தித்து கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.



மேலும், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவையான குளோபல் ஃபேர் 2023 இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இதன் மூலம் ஆள் கடத்தலை தடுக்கவும், பல்வேறு கடத்தல்களில் சிக்குபவர்களை தடுக்கவும், தொழில் வாய்ப்புகளுக்கு பயிற்சி பெறாதவர்களுக்கு பதிலாக பயிற்சி பெற்றவர்கள் வெளிநாட்டு வேலைக்கு செல்லவும், வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு தேவையான விழிப்புணர்வு வசதிகளை ஏற்படுத்தவும் நாம் செயல்பட்டு வருகிறோம் என்றும் அமைச்சர் கூறினார்.

கொழும்புக்கு வந்து எமது அமைச்சின் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து சேவைகளையும் நாம், நீங்கள் கொழும்புக்கு வராமல் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ளுவதற்கான வாய்ப்பை உங்களுக்கு வழங்குகின்றோம்.

ஊழியர் சேமலாப நிதி , ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான பிரச்சினைகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு தொடர்பான விடயங்கள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சகத்தின் தூதரகத் துறையின் சேவைகள் முதலானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகள் குளோபல் ஃபேர் 2023 யில் செய்யப்பட்டுள்ளன என்றார்.

# மன்னாரில் முறையான திட்டமிடல் இன்மையால் பால் உற்பத்தி வீழ்ச்சி

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னாரில் திட்டமிடப்படாத வகையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக கால்நடையின் மேய்ச்சல் நிலங்கள் அழிவடைந்து பால் உற்பத்தியும் குறைந்து செல்வதாக கவலை தெரிவிக்கப்பட்டது.

நானாட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இராஜாங்க அமைச்சரும். ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் நானாட்டான் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போது பயிர் செய்கை சம்பந்தமாக ஆராயப்பட்டபோது மன்னார் மாவட்டத்தில் உப உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டப்படுவதில் தவறில்லை.

ஆனால் தற்பொழுது மன்னார் மாவட்டத்தில் நெற்பயிர் செய்வதற்கென காடுகள் அழிக்கப்பட்டு வயல் நிலங்களாக மாறுகின்றன.

இதனால் கால்நடை மேய்ச்சல் நிலங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் உப உணவு செய்கையும் விரிவுப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு ஒரு பக்கம் விவசாயிகள் ஊக்குவிக்கப்படும்போது மறுபுறம் கால்நடை வளர்ப்போர் கால்நடைக்கு மேய்ச்சல் நிலம் இல்லாத காரணத்தினால் தங்கள் கால்நடையை வளர்த்தெடுக்க முடியாது தவிக்கின்றனர்.

மன்னார் பெரும் நிலப்பரப்பில் விவசாயமும் கால்நடையுமே பிரதான தொழிலாக காணப்படுகின்றன. ஆனால் இங்கு திட்டமிடல் சரியான முறையில் மேற்கொள்ளப்படாமையால் ஒரு தொழில் வளர்ச்சிப் பாதைக்கும் மறுத்தொழில் வீழ்ச்சிக்கும் தள்ளப்பட்டு வருவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

சரியான மேய்ச்சல் நிலம் இல்லாத காரணத்தினால் மன்னாரில் தற்பொழுது பால் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி காணப்படுவதாகவும் பால் கொள்முதல் செய்யும் நிறுவனம் தெரிவித்து வருவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

# யாழில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் Glocal Fair கண்காட்சி

(யாழ். விசேட, யாழ்ப்பாண குறூப் நிருபர்கள்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் Glocal Fair கண்காட்சியானது இன்றைய தினம் சனிக்கிழமை மற்றும் நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள், யாழ்ப்பாணம் முற்றவெளி அரங்கில் நடைபெறவுள்ளதாக வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் நிவேதிகா கேதீசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இக்கண்காட்சியில் தொழில் அமைச்சின் கீழான சகல திணைக்களங்கள், ஊழியர் நம்பிக்கை நிதியம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் சேவைகளை ஒரே இடத்தில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Glocal Fair கண்காட்சியானது நாளாந்த கடமைகளுக்கு மேலதிகமாக நடமாடும் சேவையை ஏற்படுத்தி மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவையினை வழங்குவதற்கான வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் தொழில் திணைக்களம் ஊ.சே.நிதி தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. ஊ.சே.நிதி பதிவுகளை பரிசீலித்தல், ஊ.சே.நிதி பதிவு செய்யாத உறுப்பினர்களை பதிவு செய்தல், விரலடையாளங்களை பதிவு செய்தல், பெயர் மற்றும் பதிவுகளில் தவறுகள் காணப்படின் திருத்தம் செய்தல், ஆலோசனை சேவைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஊ.சே நிதி தொடர்பான தகவல்கள் பரிசீலிக்க வருகை தருவோர் அடையாளத்தை உறுதிப்படுத்த தே.அ.அட்டை/ B படிவத்தை எடுத்து வருதல் வேண்டும். அத்துடன் பெயரில் திருத்தங்களை மேற்கொள்ள வருகை தருவோர் தமது தொழில் தருநரின் உறுதிப்படுத்தலுடனான கடிதங்களை எடுத்து வருதல் வேண்டும்.

ஊழியர்கள் ஊ.சே நிதியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளீர்களா என்பதை காலதாமதமின்றி தங்கள் நிறுவனத்தில் அல்லது மாவட்டத் தொழில் அலுவலகத்தில் பரிசீலித்து பதிவு செய்யப்படவில்லையாயின் மேற் குறித்த ஆவணங்களுடன் வருகை தருவது இலகுவாக அமையும் என குறிப்பிட்டுள்ளார்.

# வாக்குமூலம் அளிக்க சென்ற வயோதிப பெண் திடீர் மரணம்

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் இளைஞனொருவரின் திடீர் மரணம் தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதாக பொலிஸ் நிலையத்துக்கு சென்ற வயோதிப பெண்ணொருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்கு தெரு பகுதியில் வீடொன்றில் வாடகைக்கு தங்கியிருந்த மல்லாவி துணுக்காய் பகுதியைச் சேர்ந்த ஜே. தேவரஞ்சன் (வயது 31) எனும் இளைஞன் கடந்த புதன்கிழமை இரவு தற்கொலை செய்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ். பொலிஸார் இளைஞன் தங்கியிருந்த வீட்டின் மற்றுமொரு அறையில் தங்கியிருந்த வயோதிப பெண்ணை வாக்குமூலம் அளிப்பதாக வருமாறு நேற்று முன்தினம் அழைத்திருந்தனர்.

அதனடிப்படையில் வாக்குமூலம் அளிக்க பொலிஸ் நிலையம் சென்றிருந்த பெண்மணி , திடீர் சுகவீனமுற்று பொலிஸ் நிலையத்தில் மயங்கி விழுந்துள்ளார்.

அதனையடுத்து நோயாளர் காவு வண்டி மூலம் பெண்மணியை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து சென்ற போது , பெண்மணி உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். மலர் என்ற 75வயதுடைய பெண்னே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 21 பேருக்கு சுகாதார பணியாளர்களாக நிரந்தர நியமனம்

(மாங்குளம் குருப் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயிற்சிகளை நிறைவு செய்த 21 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு பயிற்சியினை நிறைவு செய்த 21 பேருக்கு அண்மையில் சுகாதார பணியாளர்களாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் வழங்கும் இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.க.கனகேஸ்வரன் (நிர்வாகம்), மாவட்ட பிரதம கணக்காளர் திரு. ம.செல்வரட்ணம், மாவட்ட பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் திரு.லிங்கேஸ்வரன், மாவட்ட பல்நோக்கு அபிவிருத்தி செயலணியின் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்துகொண்டனர்.



வவுனியா பல்கலைக்கழக மாணவர்களால் பொலித்தீன் பாவனையினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நடைபவனியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நடைபவனியானது பூங்கா வீதியிலுள்ள பல்கலைக்கழக வாயிலில் ஆரம்பித்து மணிக்கூட்டு சந்தி ஊடாக சென்று புதிய பஸ் நிலையத்தை வந்தடைந்தது.

# பெரடைஸ் குளத்தில் சேறு அகற்றும் போர்வையில் இரத்தினக்கல் அகழ்வு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி குருவிட்ட பெரடைஸ் குளத்திலுள்ள சேற்று மண்ணை அகற்றும் போர்வையில் இங்குள்ள மண்ணை எடுத்துச் சென்று இரத்தினக்கல் அகழும் நடவடிக்கை இடம் பெற்று வருவதாக பிரதேச மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த குளத்தின் நீரை நெற்செய்கைக்கு பயன்படுத்துவதாக கூறி இக்குளத்தின் அடியிலுள்ள இரத்தினக்கல் கிடைக்கும் கனியமண்ணை இப்பணியில் ஈடுபட்டுள்ள குழுவினர் எடுத்துச் செல்வதாக இவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

அத்துடன் இக்குளத்திலுள்ள சேற்றை அகற்றும் ஒப்பந்தம் தனிப்பட்ட ஒருவருக்கு வழங்கி இருப்பதாகவும் அவரின் முயற்சியால் இங்குள்ள இரத்தினக்கல் கனியமண் வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நடவடிக்கையால் இந்தக் குளத்திலிருந்து குடிநீரை பெற்று வந்த சுமார் 2000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இதை உடனடியாக நிறுத்துமாறு பிரதேச மக்கள் இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் பாதுகாப்புத் துறை மற்றும் கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் ஆகியோருக்கும் எழுத்து மூலம் முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ளதாகவும் பிரதேச கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவித்தனர்.

# டாக்டர் அம்பேத்கர் நினைவு தினம் அனுஷ்டிப்பு

(அக்குறணை குறூப் நிருபர்)

மலையக கலை கலாசார சங்கத்தினால் இந்திய அரசியல் அமைப்பின் தந்தை அம்பேத்கர் நினைவுதினம் கண்டி வீரகெப்பட்டிப்பொல மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. மேலும் இந்நிகழ்வில் பிரபல முன்னாள் ஈழத்து நடிகையான கண்டியூர் சந்திரா (ஈழத்து அஞ்சலிதேவி) மற்றும் பிரபல கலைஞர் விஸ்வநாத ராஜா ஆகியோரின் நினைவு தினமும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதில் பல்வேறு கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

## மலைச்சாரல்



96 வருடங்களாக சுத்தமான குடிநீரின்றி அவதியுற்ற இரத்தினபுரி இறம்புக்கந்தை தமிழ் வித்தியாலயத்துக்கு கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் 1993 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர மாணவர்களின் முயற்சியின் பயனாக குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. வட்டக்கச்சியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கலைமதி கோபாலப்பிள்ளை மற்றும் திருமதி. பார்கவி ஆகியோரின் நிதி அனுசரணையில் திருமதி. சிவநிதியின் கரங்களினால் மாணவர்களின் பயன்பாட்டுக்காக குடிநீர்திட்டம் திறந்து வைக்கப்பட்டது.

# ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர் கைது

(அக்குறணை குறூப் நிருபர்)

மஹியங்கனை பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹியங்கனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமையவே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 16 கிராம் 710மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. பேராதனை, கன்னொருவ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கைதுசெய்யப்பட்ட போது, அவரிடமிருந்த போதைப் பொருளுக்கு மேலதிகமாக, சிறிய டிஜிட்டல் தராசு, இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் ஐரோப்பா, ஜேர்மனுக்கு பயணமானார்

ஐரோப்பா, ஜேர்மன் நாட்டில் ஹம் எனும் பதியில் கோவில் கொண்டுள்ள திருநல்லூர் ஸ்ரீஆறுமுக வேலழகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று ஆரம்பமானது.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை விநாயகர் வழிபாடு கிராமசாந்தி, வாஸ்துசாந்தி ஆகிய பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி இன்று துவஜாரோஹணம். கொடியேற்றத்துடன் தொடர்ந்து 10 நாட்களுக்கு மஹோற்சவம் நடைபெறவுள்ளது. மேற்படி ஆலய மஹோற்சவத்தை நடாத்தி வைப்பதற்காக சர்வதேச இந்து மத குருபீடாதிபதி சபரிமலைக் குருமுதல்வர் மஹாராஜ ராஜகுரு ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் புதன்கிழமை ஜேர்மன் நாட்டிற்கு பயணமானார்.

20 நாட்கள் வெளிநாட்டில் தங்கியிருக்கும் குருபீடாதிபதி, பிரான்ஸ், சுவிஸ், டென்மார்க்... நாடுகளுக்கும் சென்று ஆன்மீக பணியாற்றி நாடுதிரும்பவுள்ளார். கடந்த 24 வருடங்களாக உலகளாவிய ரீதியில், மலேசியா, சிங்கப்பூர், கனடா, லண்டன், ஜேர்மன், சுவிசர்லாந்து, பிரான்ஸ், நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளில் ஆன்மீக உரைகள் ஆலய கும்பாபிஷேகங்கள் சபரிமலை ஸ்ரீஐயப்பசுவாமி மலையாள பூஜை உற்சவங்களை நடாத்தி வருபர் என்பது குறிப்பிடத்தக்கது.



# 52 ஆண்டுகளில் இந்தியா இரண்டாவது பெரும் பொருளாதார நாடாக உருவெடுக்கும்

## சீனா முதலிடத்தில் என்றும் ஆருடம்

அடுத்த 52 வருடங்களில் இந்தியா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார வளம் கொண்ட நாடாக மாறிவிடும் என்றும் 2075 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் மொத்த தேசிய உற்பத்தியான 51.5 டிரில்லியன் டொலர் பொருளாதாரத்தைப் பின்னுக்குத்தள்ளி 52.5 டொலர் மொத்த தேசிய உற்பத்தி நாடு என்ற நிலையை அடையும் என்றும் கோல்ட்மன் சச்ஸ் மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2075 இல் மொத்த தேசிய உற்பத்தியை 57 டிரில்லியன் டொலர்களாக அதிகரிக்கும் சீனா, முதலிடம் வகிக்கும் என்றும் இந்தியா இரண்டாம் இடத்தைப் பிடிக்கும் என்றும் இந்த அறிக்கை எதிர்வு கூறியிருக்கிறது.

தற்போது, அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனிக்கு அடுத்ததாக உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா விளங்கி வருகிறது. கடந்த மார்ச் மாத பொருளாதார தகவல்களின் பிரகாரம், இந்தியா 3.5 டிரில்லியன் அளவை எட்டியிருக்கிறது. கோல்ட்மன் நிறுவனத்தின் இந்திய பொருளாதார நிபுணரான சாந்தனு சென்குப்தா, இப் பிராந்திய பொருளாதார நாடுகளை எடுத்துக் கொண்டால் அடுத்த இருபது ஆண்டுகளில் இந்தியாவின் சார்ந்திருக்கும் தேவை வெகுவாகக் குறைந்துவிடும் என்று தெரிவித்துள்ளதோடு இந்தியாவின் தொழில் செய்யும் வயதுடைய இளைஞர் தொகை கணிசமானதாக இருக்கும் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவின் பொருளாதார எதிர்காலம் பிரகாசமாக இருந்தாலும், கடந்த 15 ஆண்டுகளாக இந்திய தொழிலாளர் பங்களிப்பு குறைந்து வருவதாகவும், தொழிலாளர்களாக பெண்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது என்றும் இந்த அறிக்கையில் எதிர்மறை அம்சமாக குறிப்பிடப்பட்டிருப்பதோடு, தொழில் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார இலக்கை இந்தியா எட்ட உதவும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சீரடி சாயி மத்திய நிலையத்தில் சாய் புளோரா ஊதுபத்திகள் அறிமுகம்

கொழும்பு 13 புதுச்செட்டித்தெரு சீரடி சாயி மத்திய நிலையத்தில் சாய் புளோரா (SAI Flora) ஊதுபத்தி கடந்த வியாழக்கிழமை மாலை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

சீரடி சாய் வசந்த மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் காவடி கற்பூர உற்பத்தி நிறுனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான மாணிக்கவாசகம் பிரபாகரன், சீரடி சாயி மத்திய நிலையத்தின் தலைவர் எஸ்.என். உதயநாயகன் மற்றும் பொதுச் செயலாளர் எஸ். தியாகராஜா ஆகியோரிடம் "சாயி புளோரா" ஊதுபத்தி பொதி கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பி.எம். தக்க்ஷனும் கலந்து கொண்டார். அச்சந்தர்ப்பத்தில் ஊது பத்தி பொதிகள் மூலம் சீரடி சாயி வசந்த மண்டபம் அலங்கரிக்கப்பட்டிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வெலிகாமம் முர்ஸிய்யா அரபுக் கல்லூரி முன்னாள் அதிபருக்கு கத்தமுல் குர்ஆன்

**பேருவளை விசேட நிருபர்**



வெலிகாமம் முர்ஸிய்யா அரபுக் கல்லூரியின் அதிபராக நீண்ட காலம் பதவி வகித்து அண்மையில் இறையடி சேர்ந்த மர்ஹூம் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி ஸூல்தான் ஏ.முஹியித்தீன் ஆலிம் (பஹ்ஜி) யின் 40ஆவது நாள் கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் நாளை 16ஆம் திகதி (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு புதிய அதிபர் மௌலவி முஹம்மத் அஸ்கின் (முர்ஸி) தலைமையில் கலாபீட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம் மஜ்லிஸில் மாத்தறை மின்னத்துல் பாஸிய்யா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி அஸ்ஸெய்யித் பஸ்மின் மௌலானா (முர்ஸி) விசேட பேச்சாளராக கலந்து கொள்வார்.

கல்லூரி நிர்வாகம், பழைய மாணவர் சங்கம் மற்றும் வெலிகம சாதுலிய்யா வாலிபர் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள நிகழ்வில் கலீபதுல் குலபா மௌலவி அல்ஹாஜ் எம்.இஸட். முஹம்மத் ஸூஹூர் (பாரி) உட்பட சதாத்மார்கள், கலீபாக்கள் உலமாக்கள், கலாபீட நிர்வாகிகள் பலரும் கலந்து கொள்வர்.

# அமெரிக்க இந்துக்கள் எதிர்கொள்ளும் வன்முறை தாக்குதலும் வெறுப்புணர்வும்

இந்துக்களான அமெரிக்க பிரஜைகள் மீது வெறுப்புணர்வும், வன்முறையும் பிரயோகிக்கப்படுவதாகவும் 2020 இல் மேற்கொள்ளப்பட்ட அமெரிக்கதேசிய புலனாய்வு அமைப்பின் தகவல் சேகரிப்பின் மூலம், இந்துக்கள் மீதான வெறுப்பு சார் குற்றச் செயல்கள் 500 சதவீதத்தால் அதிகரித்திருப்பது தெரியவந்திருப்பதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

சமீபத்தில் வொஷிங்டன் 'கெப்பிட்டல் ஹில்'லில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தேசிய இந்து பிரசார தின வைபவத்தில் குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சி காங்கிரஸ் உறுப்பினர்களான ரிக் மெக்கோர்மிக், இந்திய அமெரிக்க அரசியல்வாதியான ஸ்ரீ தனிதார், ஜோர்ஜியாவில் படிகார்டர், காங்கிரஸ் உறுப்பினர்களான தோமஸ்கேன், ஹாங்க் ஜோன்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவில் வசிக்கும் 30 இலட்சம் இந்து சமூகம், கடுமையாக உழைக்கும், அமைதி பேணும் சமூகம் என காங்கிரஸ் உறுப்பினரான மெர்கோர்மிக் வர்ணித்தார்.

அவரது தொகுதியான சீட்டல் நகரே சாதி ரீதியான வேற்றுமைகளைத் தடுக்கும் சட்டத்தை முதன் முதலில் இயற்றியதாகவும், பாகுபாடுகளை தவிர்க்கும் சட்டத்தின் கீழ் அதை இணைக்கவே இச்சட்டம் இயற்றப்பட்ட போதிலும் அது தற்போது 'பரம்பரை' என்ற தலைப்பின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஒரே இந்து காங்கிரஸ் உறுப்பினரான ஸ்ரீதனிதார், எல்லா மனிதர்களும் தத்தமது சமயங்களை சுதந்திரமாகவும், மதவெறியின்றியும், வெறுப்புணர்வின்றியும் பின்பற்றுவதற்கு சுதந்திரம் உள்ளது என்றும் மதச் சுதந்திரம் முக்கியமானது என்றும் குறிப்பிட்டார். அமெரிக்காவில் நான்கு பேரில் ஒருவருக்கு மட்டுமே ஒரு இந்துவைத் தெரியும், என்றும் அவர் தெரிவித்தார். இங்கு உரையாற்றி சிட்னி பேராசிரியரான செல்வடோர் பொனோனஸ், அமெரிக்க இந்துக்கள் மத்தியில் பெரிய அளவில் சாதியம் நுழைந்துவிட்டதாகவும் அது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்தியர்களுக்கு யார் யார் என்னென்ன சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதை தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார். இந்த சாதி பாகுபாடு அமெரிக்க சீக்கிய, முஸ்லிம், பௌத்த மற்றும் கிறிஸ்தவ சமூகத்தினர் மத்தியிலும் காணப்படுகிறது என்றும் அவர் சொன்னார்.

அமெரிக்காவில் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 5.4 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். அமெரிக்காவில் மூன்று மில்லியன் இந்துக்கள் வசிக்கின்றனர். அமெரிக்காவின் நான்காவது பெரிய மதமாக இந்துமதம் விளங்குகிறது. சீக்கியர்கள் ஐந்து இலட்சம் பேரும் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் சமணர்களும், ஆறு இலட்சம் தெற்காசிய முஸ்லிம்களும் அமெரிக்காவில் வசிக்கின்றார்கள்.










# யாழ் வர்த்தக சமூகத்தினருக்கு தனது நிபுணத்துவ சேவையை வழங்கவுள்ள First Capital நிறுவனம்

ஜனசக்தி குழும நிறுவனமான First Capital Holdings PLC, யாழ் வர்த்தக சமூகத்தினரிடையே முதலீட்டு வங்கியியல் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவை தொடர்பான அறிவை மேம்படுத்தும் நோக்கிலும், அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சர்வதேச வர்த்தக சந்தை கண்காட்சியில் பங்கேற்றிருந்தது. முழுமையான சேவையை வழங்கும் முன்னணி முதலீட்டு நிறுவனம் என்ற வகையில், முதலீட்டு வங்கியியல் தொடர்பான பல தகவல்களை இந்த கண்காட்சிக்கு வருகைதந்து கலந்துகொண்டவர்களுக்கு First Capital நிறுவனம் வழங்கி விளக்கமளித்திருந்தது.

மேலும், இப்பிராந்தியத்திலுள்ள வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு தனது நிறுவன தயாரிப்புக்கள் மற்றும் சேவை தொடர்பில் தெளிவூட்டுவதற்கும், அவர்களது தேவைகளை அறிந்துகொள்ளும் வகையிலும் நேரடி கலந்துரையாடலுக்கான விசேட நிகழ்வை First Capital நிறுவனம் யாழ்ப்பாணம் Jetwing ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது.



இந்நிகழ்வில் ஜனசக்தி குழுமத்தின் ஓய்வுபெற்ற தலைவரும், யாழ் வர்த்தக சமூகத்தில் நன்கு அறியப்பட்டவருமான மதிப்பிற்குரிய சந்திரா ஷாஃப்டர் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய First Capital Holdings PLC நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான டில்ஷான் வீரசேகர, "யாழ் பிராந்தியத்துக்கு வருகை தந்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். முதலீட்டு வங்கி தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் மக்கள் காட்டும் ஆர்வம் தொடர்பில் நாம் வியப்படைகிறோம். மேலும் இவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, இவை பற்றிய தெளிவான விளக்கத்தை வழங்கவும் நாம் மும்முரமாக செயற்பட்டு வருகிறோம். இதன்மூலம் உங்கள் முதலீடுகள் தொடர்பில் சரியான முடிவுகளை நீங்கள் எடுக்கமுடியும்.

இலங்கையில் முன்னோடியான முதலீட்டு நிறுவனம் என்ற வகையிலும், நாற்பது வருடங்களுக்கும் மேலாக இயங்கிவரும் நம்பிக்கை மற்றும் செயற்திறனுடன் கட்டமைக்கப்பட்ட பாரம்பரியமான ஜனசக்தி குழுமத்தில் உள்ள ஒரு முன்னேற்றகரமான நிறுவனம் எனும் வகையிலும் உங்கள் முதலீட்டுத் தேவைகளுக்கான சரியான நிதித் தீர்வுகள் குறித்து எமது நிபுணத்துவ சேவையை வழங்குவதற்கு நாம் இங்கு வந்துள்ளோம்," என்று குறிப்பிட்டார்.




## புத்தாக்கம் முக்கிய இடத்தைப் பெறுகிறது

# 'The Scale–Up Shop' திட்டத்திற்கு விண்ணப்பம் கோரல்



இலங்கையின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் துறையில் புத்தாக்கங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டத்தின் முன்முயற்சியான 'The ScaleUp Shop' திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இத்திட்டமானது ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான மத்திய அமைச்சு (BMZ) மற்றும் Deutsche Gesellschaft f□r Internationale Zusammenarbeit GmbH (GIZ) ஆகியவற்றால் கூட்டாக நிதியளிக்கப்படுகிறது.

Ceylon Chamber of Commerce, Dilmah Tea, National Innovation Agency (NIA) 'சேதன விவசாயத் துறையில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஆதரவு' திட்டத்தின் ஒரு பகுதியாக இது செயற்படுத்தப்படுகின்றது.

Ceylon Chamber of Commerce, Dilmah Tea, National Innovation Agency (NIA) "கரிம வேளாண்மைத் துறையில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவு" (இயற்கை விவசாயத் துறையில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவு) திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்பட்டது.

'The ScaleUp Shop' திட்டத்திற்கு விண்ணப்பிக்க மற்றும் மேலதிக தகவலுக்கு, http://www.thescaleupshop.com/ ஐப் பார்வையிடவும். அல்லது info@thescaleupshop.com ஊடாக தொடர்பு கொள்ளவும். இதற்கான விண்ணப்ப காலக்கெடு ஜூலை 23, 2023 ஆகும்.

# WAC Fellowshipஇல் MMCA இலங்கையானது Web3 தீர்வுகளை உருவாக்குகிறது

இலங்கையின் நவீன மற்றும் சமகால கலை அருங்காட்சியகம் (MMCA இலங்கை) ஆனது, பரிஸ் மற்றும் பெர்லினில் உள்ள We Are Museumsஇன் தலைமையின் கீழ் நடத்தப்பட்ட Web3 for the Arts and Culture (WAC) ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் திட்டத்தை, உலகெங்கிலும் உள்ள பதினொரு கலாச்சார நிறுவனங்களுடன் இணைந்து வெற்றிகரமாக நிறைவுசெய்தது.

புதிய முறைகள் இயற்றுவதற்கான இவ் ஆய்வுப் பயிற்சியானது, இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இரண்டாவது நான்கு மாத பயிற்சியாகும். இப்பயிற்சியின் மூலம் இந்நிறுவனங்கள் Web3 தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான இணையப் பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் Blockchainஐ அடிப்படையாகக் கொண்ட சில திட்டங்களை ஆராய்ந்து முதல் மாதிரிகள் அமைத்தனர். இவை இணையம் மூலம் நடத்தப்பட்ட செயல் விளக்க தினத்தில் முன்வைக்கப்பட்டன.

MMCA இலங்கையின் ஊழியர்களான உதவி எடுத்தாளுனர்கள் (கண்காட்சிகள்) ரிசெல் மார்சலின் மற்றும் தினால் சஜீவ ஆகியோர், திட்டத்தின் கடைசி மாதத்தில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பு செய்யும் ஒருவருடன் ஒத்துழைப்பதற்கு இணைந்து blockchain மற்றும் UI/UX நிபுணர்களின் ஆதரவுடன் தங்கள் சொந்த blockchain applicationஐ உருவாக்குவதற்கும் முதல் மாதிரியைத் தயாரிப்பதற்கும் அம்மாதத்தை அர்ப்பணித்தனர். "'Museum of School' என்ற எங்கள் இறுதி செயற்திட்டத்தில், MMCA இலங்கை வருகை கல்வியியலாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட கற்றல் மற்றும் பயிற்சி இணைய முகப்பு ஒன்றின் முன்மாதிரி உருவாக்கப்பட்டது. பல்வேறு பாடங்களை நிறைவு செய்வதற்கு இவர்களை ஊக்குவிப்பதற்கு NFT கலைத் தொகுப்புகளும் பரிசுகளாக இணைக்கப்பட்டுள்ளன. இப்பாடங்களுள் கலைப் பாதுகாப்பு மற்றும் கையாளுதல், அவதானிப்பு மற்றும் மெதுவாகப் பார்வையிடும் நுட்பங்கள், பார்வையாளர்களை ஈடுபடுத்துவதற்கு பயனுள்ள நுட்பங்கள் ஆகியனவும் அடங்கும்," என்று சஜீவ குறிப்பிட்டார். "இத்திட்டம் ஆரம்பத்தில் MMCA இலங்கையின் உள்ளக ஊழியர்களுக்காக குறிப்பாக வருகை கல்வியாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டாலும், இலங்கையின் நிறுவனங்கள், அருங்காட்சியகங்கள், பாடசாலைகள் மற்றும் பரந்த தெற்காசியப் பிராந்தியத்தில் கூடிய அளவில் செயல்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

சஜீவ, WAC Fellowshipஇல் தனது அனுபவத்தைப் பற்றி பேசுகையில், "Web3 தொழில்நுட்பத்தின் நுணுக்கங்களை ஆராய WAC Fellowship ஒரு பெறுமதிமிக்க வாய்ப்பை வழங்கியது. திட்டத்தின் முறையான மற்றும் நன்கு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையின் மூலம், ஒவ்வொரு வாரமும் நடைபெற்ற அமர்விற்குப் பின்னால் உள்ள பாரிய நோக்கத்தைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது,'' என கூறினார்.

# இலங்கையில் தாதியர் கல்வியை மேம்படுத்துவதில் முன்னணி வகிக்கும் ICBT உடன் கைகோர்க்கும் நவலோக குழுமம்



இலங்கையின் முன்னணி தனியார் சுகாதார சேவை வழங்குநரான நவலோக மருத்துவமனை குழுமம், மேம்பட்ட கல்வி வாய்ப்புகளுடன் தாதியர் நிபுணர்களை மேம்படுத்துவதற்காக ICBTயுடன் கைகோர்த்துள்ளது. இந்த இரண்டு நிறுவனங்களும் கடந்த மே 11ஆம் திகதி அன்று ICBT மேற்படிப்பு கல்வியகத்தின் தலைவர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

இந்த கூட்டாண்மை மூலம், நவ்லோக்க மருத்துவமனை செவிலியர்கள் ஐக்கிய இராச்சியத்தின் புகழ்பெற்ற சந்தர்லேண்ட் பல்கலைக்கழகம் வழங்கும் B'Sc (Hon.) பட்டப்படிப்பை ஆரம்பிக்க வாய்ப்பளிக்கப்படுவார்கள். நவலோக்க ஹொஸ்பிடல் ஸ்கூல் ஆஃப் நர்சிங்கில் மூன்றாண்டு ஜெனரல் நர்சிங் டிப்ளோமாவை வெற்றிகரமாக முடித்த தாதியர்களுக்கு மட்டுமே இந்த வாய்ப்பு கிடைக்கும், மேலும் பாடக் கட்டணத்தில் சிறப்பு தள்ளுபடியும் அவர்களுக்கு வழங்கப்படும்.

மேலும், நவலோக்க மருத்துவமனை மற்றும் ICBT மேற்படிப்பு கல்வியகத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பில் உயிரியல் மருத்துவப் பொறியியலில் மேம்பட்ட டிப்ளோமா திட்டமும் அடங்கும். ICBT மேற்படிப்பு கல்வியகத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவு செய்தவுடன், கொழும்பு நவலோக்க மருத்துவமனையில் மூன்று மாத உயிரியல் மருத்துவ தொழில்நுட்ப நிபுணத்துவ பயிற்சி பெற மாணவர்களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பு கிடைக்கும். இந்த பயிற்சியானது, உயிரியல் மருத்துவ உபகரணங்களை நிறுவுதல் மற்றும் பழுதுபார்த்தல் மற்றும் அளவீடு செய்தல் ஆகியவற்றில் மாணவர்களுக்கு அனுபவத்தை வழங்கும். மேலும் அவர்களின் திறன்களை மேலும் மேம்படுத்தி, உயிரியல் மருத்துவ பொறியியல் துறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற அவர்களை வழிநடத்தும்.

இந்த புதிய புரிந்துணர்வு ஒத்துழைப்பு குறித்து கருத்து தெரிவித்த நவலோக்க மருத்துவமனையின் செய்தித் தொடர்பாளர், "எங்கள் தாதியர்கள் எங்கள் சுகாதார அமைப்பின் முதுகெலும்பு மற்றும் அவர்களின் தொழில்முறை மேம்பாட்டில் நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்கிறோம்.

அதை நோக்கிய ஒரு படியாக, மேற்படிப்பு கல்வியகம் மற்றும் சந்தர்லேண்ட் பல்கலைக்கழகத்தில் ICBT உடன் கைகோர்ப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் தாதியர்களுக்கு புதிய கல்வி வாய்ப்புகளை உருவாக்கும் அதே வேளையில் அனைத்து நோயாளிகளுக்கும் விதிவிலக்கான நோயாளி பராமரிப்பு அனுபவத்தை வழங்குவதே எங்கள் நோக்கமாகும்." என தெரிவித்தார்.

# இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அண்மைய மின் கட்டணத் திருத்தங்களை வரவேற்கிறது JAAF

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவால் (PUCSL) ஜூலை டிசம்பர் காலப்பகுதிக்கான மின்சாரக் கட்டணத்தில் அண்மையில் செய்யப்பட்ட திருத்தங்களை கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் (JAAF) வரவேற்றுள்ளது. 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மற்றும் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டணத் திருத்தங்கள் தொழிற்துறை சமர்ப்பிப்புகள் போன்ற விடயங்களை கவனத்தில் கொள்ளாமல், நெரிசல் இல்லாத (Offpeak) நேரங்களில் தொழிற்துறை மின்சாரக் கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டன. இதனால் செயற்பாட்டுச் செலவுகள் முக்கியமாக அதிகரித்ததால், நெரிசல் இல்லாத (Offpeak) நேரங்களில் வேலையின்மை பிரச்சினைக்கான அவதானம் காணப்பட்டது. மேலும் இந்த காலகட்டத்தில் ஆடைத் தொழிலின் போட்டி மற்றும் ஒட்டுமொத்த நிலைத்தன்மைக்கும் பிரச்சினையாக அமைந்தது.

2022 இல், Offpeak விகிதம் ரூபா 6.58/ kWh இலிருந்து ரூபா 15/ kWh ஆக அதிகரித்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், Offpeak ரூபா 15 இலிருந்து ரூபா 34/kWh இன் கணிசமான அதிகரிப்புடன் ஆரம்பிக்கப்பட்டது, இதன் விளைவாக வெறும் 12 மாதங்களில் 400% மின் கட்டண விகிதங்கள் அதிகரிக்கப்பட்டன. கடந்த வாரம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு (PUCSL) JAAF இனால் முன்னிலைப் படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில், இலங்கையானது பிராந்தியத்தில் அதிக தொழிற்துறைக் கட்டண விகிதங்களைக் கொண்டதாகக் காணப்பட்டது. இது பிராந்தியத்தில் தொழில்துறையின் போட்டித்தன்மைக்கும், நாட்டின் பொருளாதாரம் அந்நிய செலாவணிக்கான அதிக தேவைப்பாடும் இந்த நேரத்தில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் திறனுக்கும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. எனவே, Offpeak நேரங்களில் தொழில்துறை மின்சாரக் கட்டணம் உட்பட தொழில்துறை கட்டணத்தை 29/kWh ஆகக் குறைப்பதற்கான மின்சார ஒழுங்குமுறையாளர்களின் இந்த முடிவை தொழில்துறை பெரிதும் பாராட்டுகிறது.

புதிய திருத்தங்கள் ஒட்டுமொத்த தொழில்துறை மின் கட்டண விகிதங்களை சுமார் 9% குறைத்துள்ளன. JAAF இந்த நடவடிக்கையைப் பாராட்டினாலும், உலகச் சந்தையின் பாதகமான நிலைமைகளின் காரணமாக, ஆடைத் துறையின் ஏற்றுமதி செயல்திறன் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், அதிக தொழில்துறை மின் கட்டணக் குறைப்புகளை மின்சார ஒழுங்குமுறை நிறுவனம் பரிசீலிக்கும் என்று தொழில்துறையினர் நம்புகின்றனர்.

மே 2023 இல் ஆடை மற்றும் துணி ஏற்றுமதி வருமானம் 14.55% குறைந்துள்ளதால், தொழில்துறை மின்சாரக் கட்டண விகிதங்களைக் குறைப்பதன் மூலமும் தொழிற்துறையினர் மேலும் செயல்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதன் மூலமும் அனுகூலங்களை அடைய முடியும். கடந்த ஆண்டு முதல் மீண்டும் மீண்டும் மின்கட்டண உயர்வுகளுக்கு இடையே பாதிக்கப்பட்ட பகுதியில் தொழில்துறையின் போட்டித்தன்மையை மீட்டெடுப்பதில் இதுவும் ஒரு முக்கிய அங்கமாகும்.

## நியூ ஹொல்லன்ட் டிரக்டர்களுக்கு பிரபலமான லீசிங் ஊக்குவிப்பு சேவையை

# மீண்டும் அறிமுகம் செய்துள்ள கொமர்ஷல் வங்கியும் AMWவும்

கொமர்ஷல் வங்கியும் அசோஸியேட்டட் மோட்டர்வேய்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட (AMW) நிறுவனமும் மீண்டும் கைகோர்த்துள்ளதை அடிப்படையாகக் கொண்டு உள்ளூர் விவசாயிகள் மீண்டும் ஒருமுறை நன்மைகளை அனுபவித்துக் கொள்ள முடியும். நியூ ஹொல்லண்ட் டிரக்டர்களுக்கு 135,000 ரூபா வரையான விலைக் கழிவுடன் கூடிய விஷேட நன்மைகள் பலவற்றை உள்ளடக்கிய லீசிங் சேவையை இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

இரண்டு நிறுவனங்களும் இணைந்து வழங்கும் மிகவும் பிரபலமான "அக்ரி லீசிங்;" மீண்டும் அறிமுகமாகி 2023 இறுதி வரை தொடரவுள்ளது. குறைந்த மாதாந்த குத்தகை கொடுப்பனவு, இலவச வாகனப் பதிவு, தொழிலாளர் கட்டணங்களற்ற மூன்று சேவைகள், இலவச உபகரண பொதி இவற்றுக்கு மேலதிகமாக கழிவு விலை என்பன வழங்கப்படவுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது.

இதன் தனித்துவமான பண்பானது கொமர்ஷல் வங்கியின் "கன்ன வாரிக" (பருவகால கொடுப்பனவு) தெரிவாகும். இது விவசாயிகளின் வருமான விதங்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்ட லீசிங் பொதியாகும். இதன் படி லீசிங் கொடுப்பனவானது அறுவடை காலத்திலேயே பெறப்படும்.

இந்த ஊக்குவிப்பின் பிரதான இலக்கானது மிக நவீன தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களைக் கொண்டு விவசாய சமூகத்துக்கு வலுவூட்டுவதும் அதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரித்து தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதாகும் என வங்கி அறிவித்துள்ளது. வங்கியின் விவசாய மற்றும் நுண் நிதிப் பிரிவின் அதிகாரிகள் ஊடாகவும் AMW இன் விற்பனைக் குழு ஊடாகவும் விவசாயப் பகுதிகளில் இத்திட்டம் அமுல் செய்யப்படும்.

இலங்கையின் முதல் 100 கார்பன் பாவனையினை குறைத்த வங்கி, உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் தொடர்ந்தும் 12 வருடங்களாக பட்டியலிடப்பட்ட ஒரேயொரு இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கியாகும்.

# Pangu Weather AI மாதிரி பற்றிய ஆய்வறிக்கை Nature அறிவியல் இதழில் வெளியானது

HUAWEI CLOUD, அதன் திருப்புமுனையான Pangu Weather AI மாதிரியைப் பற்றிய ஒரு கட்டுரையை உலகின் தலைசிறந்த அறிவியல் இதழ்களில் ஒன்றான Nature வெளியிட்டுள்ளது என்பதை அறிவித்துள்ளது.

Nature அட்டவணையின்படி, ஒரு சீனத் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணியாளர்கள் Nature பேப்பரின் ஒட்டுமொத்த ஆசிரியர்களாக இருப்பதை இந்த வெளியீடு முதன்முறையாகக் குறிக்கிறது. 43 வருடத் தரவைப் பயன்படுத்திய ஆழ்ந்த கற்றலின் அடிப்படையில் சரியான மற்றும் துல்லியமான உலகளாவிய AI வானிலை முன்னறிவிப்பு அமைப்பை எவ்வாறு உருவாக்குவது என்பதை விவரிக்கும் கட்டுரை, ஜூலை 5, 2023 அன்று புகழ்பெற்ற இதழில் வெளிவந்தது.

பாரம்பரியமான எண்ணியல் வானிலை முன்னறிவிப்பு முறைகளை விட அதிக துல்லியத்தை வெளிப்படுத்தும் முதல் AI கணிப்பு மாதிரி PanguWeather ஆகும். மாதிரியானது கணிப்பு வேகத்தில் 10,000x முன்னேற்றத்தை அனுமதிக்கிறது, இது உலகளாவிய வானிலைக் கணிப்பு நேரத்தைச் சில வினாடிகளுக்குக் குறைக்கிறது. "Accurate mediumrange global weather forecasting with 3D neural networks" என்ற தலைப்பில் உள்ள



கட்டுரை இந்தத் திறன்களின் சுயாதீன சரிபார்ப்புகளை வழங்குகிறது.

AI வானிலை முன்னறிவிப்பின் துல்லியமானது பாரம்பரிய எண்ணியல் முன்னறிவிப்புகளைக் காட்டிலும் குறைவானது என்று முன்னர் இருந்த அனுமானங்களுக்கு PanguWeather சவால்விடுக்கிறது. HUAWEI CLOUD குழுவால் உருவாக்கப்பட்ட இந்த மாதிரியானது, பாரம்பரிய எண் கணிப்பு முறைகளை விட அதிக துல்லியம் கொண்ட முதல் AI கணிப்பு மாதிரியாகும்.

கடந்த 30 ஆண்டுகளில் மிக விரைவாக மேம்பட்டுள்ள கணினி ஆற்றலின் விளைவாக, எண்ணியல் வானிலை முன்னறிவிப்பின் துல்லியம் வியத்தகு முறையில் மேம்பட்டுள்ளது, இது கடுமையான பேரழிவு எச்சரிக்கை மற்றும் காலநிலை மாற்றக் கணிப்புகளை வழங்குகிறது. எனினும் அந்த முறை ஒப்பீட்டளவில் அதிக நேரத்தை எடுத்துக்கொள்கிறது.

# தொழில்துறை மாற்றத்தில் AI ஏற்படும் தாக்கத்தில் கவனம் செலுத்தும் Huawei

AI அலையால் உந்தப்படும் புதிய தொழில்துறை வாய்ப்புகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை Huawei முன்னெடுக்கிறது. HUAWEI CLOUDஇன் Huawei நிர்வாக இயக்குநரும் CEOவுமான ஜாங் பிங்கன் அவர்கள் Huaweiஇன் டெவலப்பர் மாநாட்டில் தனது மைய உரையின்போது, Pangu Model 3.0 மற்றும் Ascend AI கிளவுட் சேவைகளை வெளியிட்டார். இந்தக் கண்டுபிடிப்புகள் தொழில்துறை வாடிக்கையாளர்கள் மற்றும் கூட்டாளர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன மற்றும் பல்வேறு துறைகளில் மாற்றத்தக்க வளர்ச்சிக்கான செயற்கை நுண்ணறிவின் திறனைத் திறக்கின்றன.

Pangu Models 3.0 என்பது முன் பயிற்சி பெற்ற மாதிரிகளின் அமைப்பாகும், இது சூழ்நிலை சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பல தொழில்துறைகளில் உள்ள சிக்கலான சவால்களை எதிர்கொள்ளவும் விரைவாக மாற்றியமைக்கப்படலாம். பெரிய அளவிலான தரவுத் தொகுப்புகள் மற்றும் எந்திரக் கற்றல் நெறிமுறைகளை மேம்படுத்துவதன் மூலம், வானிலை முன்னறிவிப்பு, மருந்து மேம்பாடு, ரயில்களில் தவறுகளைக் கண்டறிதல் மற்றும் சுரங்கத் தொழில் போன்ற பல்வேறு பகுதிகளில் AIஇன் தொழில்துறைப் பயன்பாட்டில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் Pangu 3.0 அமைக்கப்பட்டுள்ளது. மேலும் திரு. ஜாங் கூறியதாவது: "Huawei Cloud Pangu மாதிரிகள், ஒவ்வொரு துறையிலும் உள்ள அனைவருக்கும் ஓர் அறிவார்ந்த உதவியாளராக ஆற்றலை அளிக்கும், இதன் மூலம் அவர்களின் உற்பத்தியும் திறனும் மேம்படும்.




"தொழில்துறைகளுக்கான AI" என்ற எங்கள் நோக்கத்தை நாங்கள் தாங்கிப்பிடித்து, AI உடன் அனைத்துத் தொழில்துறைகளையும் மாற்றியமைக்க Pangu மாதிரிகளைப் பயன்படுத்துவோம்.

புகழ்பெற்ற அறிவியல் இதழான Nature சமீபத்தில் வானிலை முன்னறிவிப்புக்குச் செயற்கை நுண்ணறிவு கொண்டுள்ள மகத்தான திறனை விவரிக்கும் ஒரு கட்டுரையை வெளியிட்டது. 43 வருடத் தரவைப் பயன்படுத்தி ஆழ்ந்த கற்றலின் அடிப்படையில், Huaweiஇன் Pangu வானிலையியல் மாதிரிக் குழு எவ்வாறு சரியான மற்றும் துல்லியமான உலகளாவிய AI வானிலை முன்னறிவிப்பு அமைப்பை உருவாக்கியது என்பதைப் பேப்பர் விவரித்தது



ஏறாவூர் அல் அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை (தேசிய பாடசாலை) மாணவிகள் வலயமட்ட எறிபந்து போட்டியில் 17 வயது பிரிவில் முதல் தடவையாக பங்குபற்றி முதலாம் இடத்தினை பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். வெற்றி பெற்ற பெண்கள் அணியினரை பயிற்சி ஆசிரியர்களுடன் படத்தில் காணலாம்.
(படம்: ஏறாவூர் சுழற்சி நிருபர்)

# கொழும்பு-ஜாவாலேன் இடையிலான சிட்டி லீக்கின் முக்கிய போட்டி நாளை

## வார இறுதியுடன் ஆரம்ப சுற்றுப் போட்டிகள் நிறைவு



சிட்டி லீக் கிண்ண கால்பந்து தொடரின் ஆரம்ப சுற்றின் கடைசி இரு போட்டிகளும் இன்றும் (15), நாளையும் (16) கொழும்பு சிட்டி லீக் மைதானத்தில் நடைபெறவுள்ளன. இதில் சோன்டர்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் மாளிகாவத்தை யூத் அணிகளுக்கு இடையிலான போட்டி இன்று பிற்பகல் 3.30க்கு நடைபெறவிருப்பதோடு கொழும்பு கால்பந்து கழகம் மற்றும் ஜாவாலேன் அணிகளுக்கு இடையிலான போட்டி நாளை அதே நேரத்திற்கு நடைபெறவுள்ளது.

தலைவர் கிண்ண கால்பந்து தொடரின் புள்ளிப் பட்டியலில் தற்போது முன்னிலையில் இருக்கும் ஜாவாலேன் அணி 3 போட்டிகளில் பங்கேற்று இரண்டு போட்டிகளில் வெற்றியீட்டி ஒரு போட்டியை சமநிலை செய்து 7 புள்ளிகளை பெற்றுள்ளது.

முன்னிலை கால்பந்து தொடர்கள் பலதிலும் சம்பியனாகி இருக்கும் கொழும்பு கால்பந்து கழகம் விளையாடிய மூன்று போட்டிகளில் ஒரு போட்டியில் வெற்றியீட்டி இரு போட்டிகளை வெற்றி தோல்வி இன்றி நிறைவு செய்து 5 புள்ளிகளை பெற்றுள்ளது.

இதனால் இந்தத் தொடரின் புள்ளிப்பட்டியில் முதலிடத்தை பெறுவதற்கு ஜாவாலேன் மற்றும் கொழும்பு கால்பந்து கழகத்திற்கு இடையே கடும் போட்டி நிலவி வருகிறது.

சோன்டர்ஸ் விளையாட்டு கழகம் தற்போது மூன்று போட்டிகளில் பங்கேற்று அந்த அனைத்து போட்டிகளையும் சமநிலை செய்து 3 புள்ளிகளைப் பெற்று புள்ளிப் பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளது. மாளிகாவத்தை யூத் அணி இதுவரை ஆடிய அனைத்து போட்டிகளிலும் தோல்வியுற்றிருப்பதால் புள்ளிப் பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது.

இதனால் மாளிகாவத்தை யூத் அணி இறுதிச் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது. ஆரம்ப சுற்றின் நான்கு போட்டிகளிலும் ஆடி இருக்கும் மொரகஸ்முல்ல விளையாட்டுக் கழகம் 5 புள்ளிகளை பெற்றிருப்பதால் அவர்கள் இறுதிச் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளனர்.

ஆறாவது முறையாகவும் நடத்தப்படும் சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரில் வெற்றிபெறும் அணிக்கு 150,000 ரூபாவும் இரண்டாம் இடம் பிடிக்கும் அணிக்கு 100,000 ரூபா பரிசும் வழங்கப்படுவதோடு ஒவ்வொரு போட்டியிலும் திறமையை வெளிப்படுத்தும் வீரர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அரையிறுதிப் போட்டிகள் இந்த மாத இறுதியிலும் இறுதிப் போட்டி எதிர்வரும் ஒகஸ்ட் 6 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.



அபுதாபியில் உள்ள சிராஜ் பினான்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ருசாண் பிரோஸ் மலேசியாவுக்கு செல்லவிருக்கும் சாஹிரா கல்லூரி கால்பந்து அணி சுற்றுப்பயணத்திற்கு ரூபா 500,000 பங்களிப்பை வழங்கியுள்ளார். இந்த நன்கொடை அண்மையில் கல்லூரி வளாகத்தில் அதிபர் டிரிஸ்வி மரிக்கார் இடம் கையளிக்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி ஆளுநர் சபை விளையாட்டு உபகுழுவின் தலைவர் நைனா மொஹமட், டி. ஜே. சுஞ்சீர், 87ஆவது பழைய மாணவர் குழு தலைவர் எம். ஏ. நிஸ்லான், செயலாளர் எம். இசட். இன்பியாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (படம்: ருஸைக் பாரூக்)



கிண்ணியா அல் ஹிரா மகளிர் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற கிண்ணியா பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட விளையாட்டு விழாவில், பெண்களுக்கான எல்லே போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்று, மாகாண மட்ட போட்டிக்கு தகுதி பெற்ற கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய அணியை படத்தில் காணலாம்.
(படம்: கிண்ணியா மத்திய நிருபர்)

# இலங்கைக்காக வரலாற்று தங்கம் வென்றார் நதீஷா



5ஆவது ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட இலங்கை வீராங்கனை நதீஷா ராமாநாயக்க தங்கப் பதக்கம் வென்றார்.

போட்டி தூரத்தை 52.61 விநாடிகளில் நிறைவு செய்த அவர், இம்முறை ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கைக்காக முதலாவது தங்கப் பதக்கத்தை வென்று கொடுத்தார்.

400 மீற்றர் ஓட்டப் போட்டியில் தனது சிறந்த காலத்தை பதிவுசெய்த அவர், பெண்களுக்கான 400 மீற்றரில் இலங்கை வீராங்கனை ஒருவரின் 3ஆவது சிறந்த காலத்தையும் பதிவு செய்தார்.

இறுதியாக 2000ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் பெண்களுக்கான 400 மீற்றரில் தமயந்தி தர்ஷா ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.

அதேபோன்று ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை வென்ற 8ஆவது தனிநபர் தங்கப்பதக்கமாகவும் இது இருந்தது.

இதனிடையே, பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியி'ல் நதீஷாவுக்கு பலத்த போட்டியைக் கொடுத்த உஸ்பெகிஸ்தானின் பரிடா சொலிவா (52.95 விநாடி) வெள்ளிப் பதக்கத்தையும், இந்தியாவின் ஐஸ்வர்யா கைலாஷ் (53.07 விநாடி) வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

# ஆசிய கரப்பத்து தொடரில் இலங்கை 13ஆவது இடம்



தாய்லாந்தின் தாய்பேயில் நடைபெற்றுவரும் ஆடவருக்கான ஆசிய கரப்பந்தாட்ட சவால் கிண்ணத்தில் சவூதி அரேபியாவை வீழ்த்திய இலங்கை அணி 13ஆவது இடத்தை பிடித்துக்கொண்டது.

மொத்தமாக 15 அணிகள் மோதும் இந்தப் போட்டித்தொடரின் முதல் சுற்றில் இந்தோனேசியா மற்றும் பஹ்ரைன் அணிகளுக்கு எதிராக தோல்வியடைந்த இலங்கை அணி முதல் 12 அணிகளுக்கான இடத்தை தவறவிட்டது.

அதனைத்தொடர்ந்து 13ஆவது இடத்தை தீர்மானிக்கும் வகையில் இந்தியா மற்றும் சவுதி அரேபிய அணிகளை எதிர்த்தாடியது. இதில் இந்திய அணி விளையாடாத நிலையில் இலங்கைக்கு வெற்றி அளிக்கப்பட்டது.

தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை (13) சவூதி அரேபிய அணியை இலங்கை எதிர்கொண்டது.

இதில் ஆரம்பம் முதல் சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை அணி செட்களை இலகுவாக வெற்றிக்கொண்டது. முதல் செட்டை 25–15 என்ற புள்ளிகள் கணக்கில் கைப்பற்றியதுடன், அடுத்த இரண்டு செட்களையும் 25–17 மற்றும் 25–14 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிக் கொண்டது. எனவே இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை கரப்பந்தாட்ட அணி ஆசிய கரப்பந்தாட்ட சவால் கிண்ணத்தில் 13ஆவது இடத்தை பிடித்து நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஐ.சி.சி போட்டிகளில் ஆண்களுக்கு சமமாக மகளிருக்கும் பரிசுத் தொகை

சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் போட்டிகளில் பங்கேற்கும் ஆடவர் மற்றும் மகளிர் அணிகளுக்கு சரிசமமான பரிசுத் தொகை வழங்கப்படும் என்று அந்த கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது. டர்பனில் நடந்த ஐ.சி.சி வருடாந்த மாநாட்டிலேயே இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

“எமது விளையாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக இது உள்ளதோடு ஐ.சி.சி சர்வதேச போட்டிகளில் போட்டியிடும் ஆடவர் மற்றும் மகளிர் அணிகளுக்கு தற்போது சரிசமமான பரிசு வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று ஐ.சி.சி தலைவர் கிரேக் பார்க்லி வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

“சரிசமமாக பரிசுத் தொகையை அடைவதற்காக 2017 தொடக்கம் மகளிர் போட்டிகளுக்கான பரிசுத் தொகையை ஒவ்வொரு ஆண்டும் நாம் அதிகரித்து வந்தோம்.

இன்றில் இருந்து ஐ.சி.சி மகளிர் கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வெல்லுபவர் ஆடவர் உலகக் கிண்ணத்தை வெல்பவருக்கு நிகரான பரிசுத் தொகையை பெறுவார்கள் என்பதோடு டி20 உலகக் கிண்ணம் மற்றும் 19 வயதுக்கு உட்பட்ட தொடரிலும் இது நடைமுறைப்படுத்தப்படும்” என்றும் அவர் தெரிவித்தார். இந்த ஆண்டு ஆரம்பத்தில் மகளிர் டி20 உலகக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய அணிக்கு 1 மில்லியன் டொலர் பரிசுத் தொகை வழங்கப்பட்டதோடு இறுதிப் போட்டிக்கு முன்னேறிய தென்னாபிரிக்கா 500,000 டொலர்களை வென்றது. எனினும் கடந்த ஆண்டு நவம்பரில் டி20 உலகக் கிண்ணத்தை வென்ற இங்கிலாந்து ஆடவர் அணிக்கு 1.6 மில்லியன் டொலர் பரிசுத் தொகை வழங்கப்பட்டதோடு இறுதிப் போட்டியில் தோற்ற பாகிஸ்தான் அணி 800,000 டொலர்களை வென்றது.

# இந்திய அணி ஆதிக்கம்

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் வலுவான நிலையை பெற்றுள்ளது.

மேற்கிந்திய தீவுகளின் விட்சோர் பார்க்கில் கடந்த புதன்கிழமை ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 64.3 ஓவர்களில் 150 ஓட்டங்களுக்கே சுருண்டது. அபாரமாக பந்துவீசிய ரவிச்சந்தர் அஷ்வின் 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி இரண்டாவது நாளான நேற்று முன்தினம் (13) ஆட்ட நேர முடிவின்போது 113 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 312 ஓட்டங்களை பெற்றிருந்தது.



ஆரம்ப வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் அணித்தலைவர் ரோஹித் ஷர்மா 229 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். இதன்போதும் ரோஹித் ஷர்மா 103 ஓட்டங்களை பெற்றதோடு ஜெய்ஸ்வால் 143 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

இதன்மூலம் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 162 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

# இலங்கை ரக்பி தலைவர் இல்யாஸின் மேன்முறையீடு ஆசிய ரக்பி நிராகரிப்பு



இலங்கை ரக்பி நிறுவனத்தின் தலைவர் மற்றும் அந்த நிறுவனத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்தி விளையாட்டு அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செயற்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

எனினும் இலங்கை ரக்பி தலைவர் மொஹமட் இல்யாஸின் மேன்முறையீட்டை ஆசிய ரக்பி மேன்முறையீட்டு சபை ஒன்றினால் நிராகரிக்கப்பட்ட பின் அவரது இடைநிறுத்தம் உறுதி செய்யப்பட்டதாக ஆசிய ரக்பி நேற்று (14) அறிவித்தது.

இலங்கை ரக்பி சம்மேளனத்தின் தலைவர் மொஹமட் ரிஸ்லி மொஹமட் இல்யாஸின் மேன்முறையீட்டை தீர்ப்பதற்காக வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்பு தொடர்பில் தலைமை வகிக்கும் ஆசிய ரக்பி மேன்முறையீட்டு சபை ஒன்று 2023 மார்ச் மாதத்தில் நியமிக்கப்பட்டதாக ஆசிய ரக்பி அறிவித்தது.

நீதிமன்ற அதிகாரி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணை அடிப்படையில் ஆசிய ரக்பி நிறைவேற்றுக் குழு மூலம் ஆசிய ரக்பி ஒழுக்கக் கட்டமைப்பை மீறிய குற்றச்சாட்டில் இல்யாஸ் குற்றங்காணப்பட்டார்.

இல்யாஸுக்கு மேன்முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டதோடு, நியமிக்கப்பட்ட மேன்முறையீட்டு சபை தலைவராக சீன தைபே ரக்பி கால்பந்து சம்மேளனத் தலைவர் ஜெப்ரி வேங் நியமிக்கப்பட்டதோடு வேறு அங்கத்தவர்களாக கசகஸ்தான் ரக்பி தலைவர் அய்குல் ஜர்டிபயேவா மற்றும் ஹொங்கொங் நீதிமன்ற அதிகாரி டேவிட் பைடன் உட்பட குழு விரிவான மதிப்பீட்டுக்கு பின் மேன்முறையீட்டை நிராகரித்துள்ளது.

இல்யாஸ் ஆசிய ரக்பி சம்மேளனத்தில் இருந்து நீக்கப்படுவது தற்போதைய ஆசிய ரக்பி சம்மேளனத்தின் பதவிக் காலம் நிறைவடையும் வரை நீடிக்கும் என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.